# பிரதோஷ வழிபாடு
# மற்றும்
# மார்கழித் திருவாதிரைத் திருவிழா (ஆருத்ரா)

அமரர் **திரு. P.N. நமசிவாயம்** அவர்களின் நினைவு மலர்

சென்னை உரத் தொழிற்சாலை, மத்திய அரசு

(மேனாள் பொது மேலாளர்)



அன்பளிப்பு

திருமதி. **நிர்மலா நமசிவாயம்**

# பிரதோஷ வழிபாடு
# மற்றும்
# மார்கழித் திருவாதிரைத் திருவிழா (ஆருத்ரா)

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அமரர் **திரு. P.N. நமசிவாயம்** அவர்களின் நினைவு மலர்

சென்னை உரத் தொழிற்சாலை, மத்திய அரசு

(மேனாள் பொது மேலாளர்)

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~



~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அன்பளிப்பு

திருமதி. **நிர்மலா நமசிவாயம்**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# உள்ளுரை


| | | |
|---|---|---|
| 1. | நூல் விவரம் | iii |
| 2. | நூல் வெளியிடுவோர் | iv |
| 4. | அமரர் திரு. **P.N.** நமசிவாயம் அவர்களின் சமையத் தொண்டுகள், சமுதாயப் பணிகள் | v |
| 5. | பிரதோஷ வழிபாடு நூல் தொகுப்பாளர் முன்னுரை | x |
| 6. | பணிந்துரை | xiii |
| 7. | பிரதோஷ வழிபாடு | 1 |
| 8. | சமுதாய, ஆன்மீக நோக்கில் பிரதோஷ வழிபாடு | 13 |
| 9. | திருஞானசம்பந்தர் அருளிய | |
| | (அ) திருநெடுங்களம் பதிகம் | 26 |
| | (ஆ) திருநீற்றுப்பதிகம் | 29 |
| 10. | மார்கழித் திருவாதிரைத் திருவிழா (ஆருத்ரா விழா) | 31 |
| 11. | திருநாவுக்கரசர் அருளிய திருவாரூர் பதிகமும் தெளிவுரையும் | 39 |
| 12. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய கோயில் (சிதம்பரம் – தில்லை) பதிகம் | 45 |
| 13. | மாணிக்கவாசகப் பெருமான் அருளிய சிவபுராணம் | 49 |

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பிரதோஷ வழிபாடு -<br>மார்கழித் திருவாதிரைத் திருவிழா<br>(ஆருத்ரா)** |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | 11.03.1997 |
| இரண்டாம் பதிப்பு | : | 14.11.2009 |
| மூன்றாம் பதிப்பு | : | 22.12.2018 |
| தாள் | : | 70 ஜி.எஸ்.எம். மேப்லிதோ |
| வெளியிட்டோர் | : | அமரர் **P.N.** நமசிவாயம் குடும்பம்<br>எ.பி. 15, 6வது மெயின் ரோடு,<br>அண்ணாநகர்,<br>சென்னை - 600 040. |
| தொலைபேசி | : | 044 - 26211744 |
| அச்சிட்டோர் | : | **எஸ்.எஸ். கிராபிக்ஸ்**<br>54/2, முகம்மது உசேன் தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |
| நூல் கிடைக்குமிடம் | : | **திரு. சூரியப்பிரதாபன்**<br>எ.பி.15, 6வது மெயின்ரோடு,<br>அண்ணாநகர்,<br>சென்னை - 600 040. |
| தொடர்புக்கு | : | 044 - 26211744<br>98840 49499 |

**இலவச வெளியீடு**

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

# பிரதோஷ வழிபாடு

சித்தாந்த சரபம், பேராசிரியர்

டாக்டர். **வை. இரத்தின சபாபதி**

மேனாள் சைவ சித்தாந்ததுறைத் தலைவர்,

சென்னை பல்கலைக்கழகம்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# மார்கழித் திருவாதிரைத் திருவிழா

சித்தாந்த சரபம் பேராசிரியர்

**டாக்டர் திருமதி கோமதி சூர்யமூர்த்தி**

சைவ சித்தாந்தத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அமரர் **திரு. P.N. நமசிவாயம்** அவர்களின் நினைவு மலர்

(மேனாள் பொது மேலாளர், சென்னை உரத்தொழிற்சாலை,

மத்திய அரசு நிறுவனம்)

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**மேற்கண்ட நூல் வெளியிடுவோர்:**

திருமதி. நிர்மலா நமசிவாயம்

**Information Technology Specialists**

**U.S.A**

திருமதி. பவானி பிரேம்பாபு, B.E., M.S.

திரு. தி.தி. பிரேம்பாபு, M.Tech.,

திருமதி. ஜெயலட்சுமி மனோகர், B.E.,

திரு. மனோகர் இராமசாமி, B.E., M.B.A.,

**Chennai**

திருமதி. அநுபமா சூரியப் பிரதாபன், B.Tech.,

திரு. ந.ந. சூரியப் பிரதாபன், B.E., M.B.A.,

செல்வன். புவனேஷ் பிரேம்பாபு, B.S., U.S.A.,

செல்வன். சரனேஷ் பிரேம்பாபு, B.S., U.S.A.,

செல்வன். சுகன் மனோகர், B.S., U.S.A.,

செல்வி. காவியா சூரியபிரதாபன்

செல்வன். கிருபாநிதி சூரியபிரதாபன்
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அமரர் **திரு. P.N. நமசிவாயம்** அவர்களின்

# சமயத் தொண்டுகள், சமுதாயப் பணிகள்

எங்கள் அருமைத் தகப்பனார் திரு. P.N. நமச்சிவாயம் அவர்கள் 1.1.2018 புது வருடம் பிறந்த தருவாயில், திருவாதிரைத் திருநாளில் இறைவன் திருவடி அடைந்தார். இவர் பல சமையத் தொண்டுகள், சமுதாயப் பணிகள் ஆகியவற்றை ஆற்றியுள்ளார்.

## சமையத்தொண்டுகள் :

(அ) சென்னை அண்ணா நகரிலுள்ள ஸ்ரீ பிடாரி மாங்காளி அம்மன் மற்றும் சித்தி வினாயகர் திருக்கோயிலில் ஒவ்வொறு மார்கழி மாதம் திருவாதிரைத் தினத்தில் ஆருத்திரா தரிசன விழாவை இரண்டு நாட்கள் வெகு விமரிசையாகக் கடந்த பத்து வருடங்கள் தொடர்ந்து நடத்தினார். முதல் நாளில் நடராசப் பெருமானுக்குப் பல்வேறு பொருட்களால் அபிடேகம், ஆராதனை மறுநாள் விடியற்காலையில் நடராசப்பெருமானின் திருவீதி உலாவை நடத்தி அவருடைய நடனம் சிறப்பாக திருவீதிகளில் நடைபெற இத்துறையில் பயிற்சி பெற்ற வெளியூர் பணியாளர்கள் மூலமாக ஏற்பாடுகள் செய்துள்ளார். நடனக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்து. அக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு **இரண்டு இலட்சம் ரூபாய்** பெறுமானப் பணிகளை அவர் செய்ய திருவருள் கூட்டியது.

(ஆ) சென்னை, திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் சமாதி நிலையத்தில் பங்குனி உத்திரப் பௌர்ணமி விழாவைக் கடந்த 40 வருடங்களாகத் தொடர்ந்து அவர் நடத்த குருவருள் துணை செய்தது. அச்சமாதி நிலையத்தில் பல வருடங்களாகச் செவ்வாய்கிழமைகளில் அடியார்களுக்குப் பிரசாதம் செய்து வழங்கினார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு மகா தேஜோ மண்டல சபை உறுப்பினர்கள் பலரை இரண்டு ஊர்திகளில் மயிலம்

முருகப்பெருமான் திருத்தலத்திற்கு அழைத்துச் சென்று மேற்கண்ட சபை உச்சநீதிமன்ற வழக்கில் வெற்றி பெற வேண்டுமென்று கூட்டுப் பிரார்த்தனை செய்து அத்திருப்பணி செலவுகள் அனைத்தையும் தாமே செய்யும் பாக்கியத்தைப் பெற்றார். உச்சநீதி மன்ற வழக்கு நிதியாக **ரூ. 50,000/-** நன்கொடை அளித்தார். **பிரார்த்தனையின் பயனாக 30.11.2017ல் உச்சநீதிமன்ற சாதகமான தீர்ப்பு சபைக்குக் கிடைத்தது. எல்லாம் பாம்பன் சுவாமிகளின் குருவருள்.**

(இ) ஐப்பசி மாதத்தில் கேதார கௌரி விரதம், ஆடி மாதத்தில் அம்மன் பூஜை ஆகியவற்றை தம்முடைய உறவினர்கள், நண்பர்கள் ஆகியவர்களை அணைத்து பல வருடங்கள் கூட்டு வழிபாடு செய்து ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

(ஈ) தம்முடைய மறைந்த பெற்றோர்களின் (எங்கள் பாட்டனார், பாட்டியார்) வருடாந்திர நினைவு தினங்களில் விரதமிருந்து மிகுந்த ஆசாரத்துடன் அவர்களின் ஆன்மா சாந்தியடைய் பித்திரு பூஜையை முறையாக தம் உறவினர்களை இணைத்து நடத்தி எழை மக்களுக்கு அன்னதானம் அளித்தார்.

(உ) தம்முடைய 60,70,80,81ஆம் ஆண்டு பிறந்த தின விழாக்களைத் திருக்கடவூர் திருத்தலத்தில் சிறப்பாக யாகம் வளர்த்து வழிபாடு செய்தார். திருக்கயிலாய பரம்பரை **தருமை ஆதினம் தவத்திரு குருமகா சன்னிதானம்** அவர்களைத் தரிசித்து அருளாசி பெற்றார். இவ்விழாக்களில் அமெரிக்காவில் வாழும் அவருடைய சந்ததியினர் பலரும் பங்கேற்றனர்.

(ஊ) அடிக்கடி நாட்டின் பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்தார்.

(எ) கீழ்கண்ட ஆன்மீகத்தலைவர்கள், குருமகா சன்னிதானங்கள் ஆகியோரைப் பலமுறை தரிசித்து வணங்கி

அவர்களின் அருளைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றார். **தவச்சீலர் மயிலை குருஜீ, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், மயிலம் சுப்பிரமணிய சுவாமி திருக்கொயில் ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சன்னிதானம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.**

(ஏ) சென்னை பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைத்தலைவர் சித்தாந்த சித்தாந்த சரபம் பேராசிரியர் Dr. வை. **இரத்தின சபாபதி** அவர்களிடம் நெருங்கி பழகி அவரிடம் **உபதேசம் பெற்று** ஆன்மீக நுட்பங்களைக் கற்றார்.

## சமுதாயப்பணிகள் :

(அ) தம்மிடம் பணியாற்றிய ஏழை தொழிலாளர்களின் சந்ததியர் பலருக்குத் திருமணங்களைத் தம்முடைய முழு செலவில் செய்தார்.

(ஆ) உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இல்லங்களில் ஏற்பட்ட சச்சரவுகளைத் தவிர்த்து அவர்கள் ஒற்றுமையாக வாழ வழி வகுத்து, சமரசம் செய்தார். அவர்களின் சொத்து பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்த்து நீதிமன்ற வழக்குகளை வாபஸ் பெறச் செய்தார்.

(இ) பல உறவினர்களின் இல்லத்திருமணங்கள் நடைபெற மூலக்காரணமாக விளங்கினார்.

(ஈ) தாம் வேலை செய்த இரயில்வேத் துறை, உரத் தொழிற்சாலைத்துறை ஆகியவற்றில் பணியாற்றிய பல ஊழியர்கள், உயர் அதிகாரிகள், கடைநிலை ஊழியர்கள் ஆகியவர்களோடு பாசத்தோடு பழகி பல்வேறு உதவிகளைச் செய்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

(உ) **ஆழ்ந்த அன்புடையவராய், அகன்ற பண்புடையவராய், கூர்த்த மதியுடையவராய், விரிந்த மனித**

**நேயம் கொண்டவராய், பாராட்டுக்குரிய ஆளுமைத்திறன் உடையவராய், தம் பொறுப்பிலுள்ள பணிகளைச் செவ்வனவே நடத்திய செயல் வீரராய், சிந்தனைச் சிற்பியாய், உத்தமருள் உத்தமராய் வாழ்ந்தார்.**

(ஊ) இக்காரணங்களால் பல I.A.S., I.P.S., அதிகாரிகள் ஆகியவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். Dr. மலைச்சாமி, I.A.S., திரு. சங்கர சுப்பையன், I.A.S., திரு. செல்லப்பா, I.A.S., திரு. துரைராஜ், I.P.S., காங்கிரஸ் தலைவர் திரு. கிருஷ்ணசாமி ஆகியோர்களின் பாராட்டைப் பெற்றார். சென்னை அண்ணாநகர் டவர் கிளப் உறுப்பினர்களின் காலை நடைப்பயிற்சி நிறைவில் நடத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்று சிறப்பான ஆன்மீகச் செய்திகளை விளக்கிப் புகழ் பெற்றார்.

(எ) குறிப்பாக, **உச்சநீதிமன்ற நீதியரசர் மாண்பமை திரு. இரத்தினவேல் பாண்டியன், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் மாண்பமை திரு.சுப்பையா** ஆகியவர்களோடு 40 வருடங்களுக்கு மேலாகப் பழகி அவர்களின் குடும்பத்தின் அங்கத்தினர் போல் செயல்பட்டார். இவரை உச்சநீதிமன்றயரசர் பல விழாக்களிலும், பல நிகழ்ச்சிகளிலும் வெகுவாகப் பாரட்டினார்.

(ஏ) அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குத் தம் மனைவியுடன் சென்று அந்நாட்டு மக்களின் நாகரீகம், பண்பாடு, நவீன வாழ்க்கை ஆகியவற்றைக் கண்டு களித்தார்.

(ஐ) எங்கள் தந்தை திரு. நமசிவாயம் அவர்கள் குழந்தையாக இருந்த பொழுது டபுள் நிமோனியா என்ற கடும் ஜுரத்தால் பாதிக்கப்பட்டு கவலைக்கிடமாக நடு நிசியில் சென்னை, இராயப்பேட்டை அரசாங்க மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். அன்று கிறிஸ்துமஸ் பண்டிகையினால் பல மருத்துவர் விடுப்பில் சென்றனர். அப்பொழுது எங்கள் பாட்டி

**திருமதி. கனகாம்புஜம்** அவர்கள் பாம்பன் சுவாமிகளிடம் மனம் உருகி, சண்முக கவசம் ஓதி, கண்ணீர் மல்க வேண்டினார்கள். தன் குழந்தையை நலமாக்கும்படியும், நலமானவுடன் நேரே பாம்பனார் சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்று தரிசனம் பெற்ற பிறகு தான் வீட்டுக்கு போவேன் என்றும் அழுதார்கள்.

நடுநிசியில் இறைவன் அருளால் மருத்துவமனைக்கு தலைமை மருத்துவர் மிக முக்கியமான V.I.P நோயாளியைப் பார்க்க வந்தபோது, அவர் எங்கள் தந்தை ஆகிய குழந்தையைப் பரிசோதித்து சிகிச்சை அளித்து மரண நிலையில் இருந்தவரை காப்பாற்றினார்.

அதன் பின்பு நலமான குழந்தையை அழைத்துக் கொண்டு மருத்துவமனையிலிருந்து பாம்பன் சுவாமி சன்னிதிக்கு கொண்டு சென்று படுக்க வைத்து விபூதி தடவி நன்றி செலுத்தினார்கள். தன் விருப்பத்தையும் வேண்டுதலையும் கூறி சண்முக கவசம் பாடி நன்றி செலுத்தினார்கள்.

(ஒ) எங்கள் தகப்பனார் தம்முடைய குழந்தை பருவத்திலேயே பாம்பன் சுவாமி அருளைப் பெற்றுத் திகழ்ந்தார். தொடர்ச்சியாக வாழ்நாள் முழுவதும் பாம்பன் சுவாமிகள் மேல் பக்தி கொண்டு தொண்டாற்றினார். அவருடைய விழாக்களில் பங்கேற்று நிதி உதவியும், சேவையும் செய்தார்கள்.

எங்கள் அருமைத் தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவர்களின் சமைய மற்றும் சமுதாயப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள எங்கள் வருங்கால சந்ததியினர் தொடர்ந்து நடத்த பாம்பன் சுவாமிகள் குருவருளையும், மயூரநாதப் பெருமான் திருவருளையும் இறைஞ்சுகிறோம்.

இங்ஙனம்

**திருமதி. பவானி பிரேம்பாபு**, B.E., M.S., (USA)

**திருமதி. ஜெயலட்சுமி மனோகர்**, B.E., (USA)

**திரு. ந.ந. சூரியப்பிரதாபன்**, B.E., M.B.A., சென்னை

உ

திருச்சிற்றம்பலம்

# பிரதோஷ வழிபாடு
# தொகுப்பாளர் முன்னுரை

சித்தாந்தசரபம்

**பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி,** எம்.ஏ., பி.எச்.டி

(மேனாள் தலைவர், சைவ சித்தாந்தத்துறை, சென்னை பல்கலைகழகம்)

சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம். சைவத்தில் விரதங்கள், நோன்புகள் என்று கூறப் பெறும் வழிபாட்டு முறைகள் பல. அவற்றுள் தலையாயது பிரதோஷ விரதம்.

பிரதோஷ வழிபாட்டினை விளக்கமாக எடுத்துக்கூற வேண்டும் என்ற வகையில் எழுதப் பெற்று, வெளியிடப்பெற்று, விளங்கும் சிறு நூல்கள் பலவாக உள்ளன.

சற்றொப்ப எல்லாச் சிவாலயங்களிலும் திருவிழாவுக்கு இணையாக இன்று கொண்டாடப் பெறும் வழிபாடு பிரதோஷ வழிபாடாகும்.

சமுதாய நோக்கிலும், ஆன்மீக நெறியிலும் தத்துவ நோக்கிலும் பிரதோஷ வழிபாட்டினை எடுத்து விளக்கும் முயற்சியில் எழுந்ததே இச்சிறு நூல்.

இந்நூல் வெளிவருவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பிரதோஷ வழிபாடு என்ற தலைப்பில் வந்த பல்வேறு செய்திகளை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்தி, வரையறைப் படுத்தி, தவறான கருத்துக்களை நீக்கி அன்பர்களுக்கு வழங்க வேண்டும் என்பது முதற் காரணம்.

சிவபுண்ணியச் செயல்களைத் தம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடத்தி, மக்களின் ஆன்மீகப் பயணத்தில் தாமும் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தினால் அருளியற் பணிகளைச் செயற் படுத்தி வரும் தொண்டுள்ளம்கொண்ட திருமிகு. P.N. நமசிவாயம் அவர்களின் நினைவூட்டுதல் இரண்டாவது காரணம்.

சென்னை உரத்தொழிற்சாலையின்(மத்திய அரசாங்க நிறுவனம்) பொது மேலாளராகப் பார்புகழப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமிகு நமச்சிவாயம் அவர்கள் திரு.பாம்பன் சுவாமிகளையும், திரு.கிருபானந்த வாரியார் சுவாமிகளையும் இரண்டு கண்களாகக் கொண்டு அவர்கள் வகுத்த நோக்கில் ஆறுமுகப் பரம்பொருளை வழிபடும் பக்திக் கடன் பூண்ட பெருந்தகையாளர் ஆவார்.

யான் நாளும் நமசிவாய மந்திர ஜெபம் செய்யும் போது என் எண்ணத்தில் தோன்றும் இனிய நண்பினர் இவர். **“நமசிவாயத்தை நான் மறவேன்”** என்ற வாக்கிற்கு இயைந்த வகையில் என் அகனமர் நெஞ்சினர்.

திருவருள் வலத்தால், நல்லர் குருவருள் வலத்தால், வல்லர் எனவும் நின்ற மரபு தழுவிய நல்லறக் குடும்பப் பெருமையுடனும் நிர்மலம் (நிர்மலா) என நின்ற கற்புடைய நன் மனைவியோடும் இல்லறத்தை இனிதே நடத்திவரும் எழில் பெறும் வாழ்க்கைத் திருவினர்.

அண்ணாநகர் அருள்மிகு பிடாரி மாகாளியம்மன் சித்தி விநாயகர் திருக்கோயில் பிரதோஷ வழிபாடு விழா எடுக்கும் திருவினராய திருமிகு நமசிவாயம் அவர்களின் திருவுள்ளம் தழையவும் பக்திப் பெருவெள்ளம் பாரெல்லாம் பெருகவும், பிரதோஷ வழிபாட்டின் நோக்கம் அனைவர் உள்ளத்திலும்

பதிந்து வழிபாடு சிறக்கவும் 1997ல் வெளியிடப் பெற்ற இந்நூல் அவர்தம் அருள் கொடையால் மலர்ந்த அமுதமாகும்.

மீண்டும் ஒரு பதிப்பைக் கண்ட இந்நூல் சென்னை அண்ணாநகர் என வழங்கும் திருமங்கலம் கிராமத்தில் உள்ள திரிபுரசுந்தரி உடனாய சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெறும் பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொள்ளும் பக்தர்கள் பயனடையுமாறு இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெறுகிறது.

பிரதோஷ வழிபாட்டில் பாராயணம் செய்ய வேண்டிய மேலும் சில பதிகங்களும் இணைத்துள்ளோம்.

பக்தர்கள் படித்துப் பயனடைவதொன்றையே கருதி வெளியிடப் பெறும் இந்நூல் ஒரு சிவபுண்ணியச் செயலின் விளைவாகும்.

வளமுடன் அனைவரும் வாழ்க வாழ்க.

14, நவம்பர் 2009 **வை. இரத்தினசபாபதி**

❊ ❊ ❊ ❊ ❊

**வாழ்க! அந்தணர் வானவர் ஆனினம்;**

**வீழ்க! தண்புனல்; வேந்தனும் ஓங்குக!**

**ஆழ்க தீயது! எல்லாம் அரன் நாமமே**

**சூழ்க! வையகமும் துயர்தீர்கவே!**

# பணிந்துரை

பிரதோஷ வழிபாடு மற்றும் மார்கழித் திருவாதிரைத் திருவிழா (ஆருத்ரா) என்ற தலைப்பில் இந்நூல் அமரர் ந.ந. நமசிவாயம் (மேனாள் பொதுமேலாளர், சென்னை உரத்தொழிற்சாலை, மத்திய அரசு நிறுவனம்) அவர்களின் நினைவு மலராக வெளியிடப்படுகிறது.

சித்தாந்த சரபம் டாக்டர் வை. இரத்தினசபாபதி (மேனாள் தலைவர், சைவ சித்தாந்தத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்) அவர்களால் எழுதப்பட்ட பிரதோஷ வழிபாடு நூல் 1997 ஆம் ஆண்டில் முதற் பதிப்பாகவும், 2009ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாகவும் எங்கள் அருமைத் தகப்பனார் திரு. **P.N.** நமசிவாயம் அவர்களால் இலவசமாக வெளியிடப்பட்டது. அவர் 1.1.2018 தேதி திருவாதிரைத் திருநாளில் முருகப்பெருமான் திருவடிநீழல் அடைந்தார்கள். அவர்களின் முதலாண்டு நினைவு தினத்தில் (22.12.2018) இந்நூல் மூன்றாம் பதிப்பாக திருவருள் துணைகொண்டு இலவசமாக வெளியிடப்படுகிறது. இந்நூலில் பிரதோஷ வழிபாட்டை வரலாறு முறையிலும், சமுதாய ஆன்மீக நோக்கிலும் விளக்கி சிவபெருமான் விஷத்தை உண்டு உலகத்தைக் காப்பாற்றினார் என்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. சைவ சமைய குரவர் திருஞானசம்பந்தர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோர்களின் பாடல்களில் இச்செய்தி சான்றுகளாக உள்ளன என்று வை. இரத்தின சபாபதி அவர்கள் மேற்கோள் காட்டியுள்ளார்கள்.

இந்நூல் பக்தர்களால் மிகவும் பாராட்டப்பட்டதால் இது மூன்றாவது பதிப்பாக திருவருள் துணையோடு வெளியிடப்படுகிறது.

இந்நூலுடன் மார்கழித் திருவாதிரைத் திருவிழா, (ஆருத்ரா) கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.

**திரு. P.N. நமசிவாயம்** அவர்கள் சென்ற ஆண்டு மார்கழி திருவாதிரைத் திருநாளில் இறைவன் திருவடிப் பேற்றைப் பெற்றதை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலரில் மேற்கண்ட கட்டுரை வெளியிடுவது சாலப் பொருத்தமாகும்.

எங்களின் வேண்டுகோளைக் கனிவுடன் ஏற்று சித்தாந்த சரபம் டாக்டர் **திருமதி கோமதி சூர்யமூர்த்தி** எம்.ஏ., பிஎச்.டி (மேனாள் பேராசிரியர், சைவ சித்தாந்தத்துறை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்) அவர்கள் தம் கட்டுரையை அனுப்பியுள்ளார்கள்.

இக்கட்டுரையில் கீழ்கண்ட தலைப்புகளில் மிக அருமையான விளக்கங்கள் உள்ளன.

மார்கழி = ம் + ஆர் + கழி, ம் = மாயை (உலகம்), ஆர் = அனுபவம், கழி = நீங்குதல் – உலக அனுபவத்திலிருந்து கழிந்து (விடுபட்டு) இறை அனுபவம் பெறக் கூடிய மிகப் புனிதமான மாதம் என்பதால் இது பீடுடைய (பெருமை) மாதம் என்று போற்றப்படுகிறது. இதன் விளக்கம் அம்மையாரின் கட்டுரையில் காணலாம்.

(அ) மார்கழி மாதச் சிறப்பு

(ஆ) திருவாதிரை விழா வழிபாட்டின் பயன்கள்

(இ) இத்திருவிழா நடைபெறும் வழிமுறைகளும், திருக்கோயில்களும்

(ஈ) இவ்விழாவைப் பற்றி திருமுறைகளிலுள்ள குறிப்புகள்

(உ) திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருவாதிரைத் திருப்பதிகமும்,அம்மையாரின் சிறப்புரையும், தெளிவுரையும்

இந்நூலில் **சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய கோயில் (தில்லை-சிதம்பரம்) திருப்பதிகம் இணைக்கப்பட்டுள்ளது.** மானிட உடல் அழிந்த பிறகு உயிருக்கு பிரத்யேகமாக தனி உடல் இறைவனால் கொடுக்கப்படும். அவ் உயிர் முற்பிறவியில் செய்த நல்வினைகள் / தீவினைகள் அடிப்படையில் இன்ப துன்பங்களைத் தனியாக கொடுக்கப்பட்ட உடல் மூலமாக உயிர் அனுபவிக்க நேரிடும். எம தூதர்கள் அவ்வுடலைச் செக்கில் ஆட்டுவதை இறைவன் தடுத்து ஆட்கொள்ள வேண்டுமென்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் மேற்கண்ட கோயில் திருப்பதிகம் பாடியருளியுள்ளார்கள்.

இப்பதிகத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினால் மேற்கண்ட துன்பத்திலிருந்து நாமும், நம் மூதாதையர்களும் விடுதலை அடையலாம். நம் மூதாதையர்களின் வருடாந்திர நினைவு நாளிலாவது இப்பதிகம் ஓதப்பட்டால் இறையருளால் அவர்கள் துன்பத்திலிருந்து விடுபடுவார்கள்.

**'தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று ஆங்கு**
**என்ற ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை' - திருக்குறள்**

தென்புலத்தார் = மூதாதையர்கள்
மூதாதையர்கள், குலதெய்வம், விருந்தினர், உறவினர், தான் என்ற ஐவகைத்தாரைப் போற்றுதல் சிறந்த கடமையாகும்.

பிரதோஷ வழிபாடு என்ற தலைப்பில் எழுதியருளிய அமரர் சித்தாந்த சரபம் **வை. இரத்தின சபாபதி** அவர்களின் திருவடிகட்கு நன்றி. மார்கழித் திருவாதிரை திருவிழா (ஆருத்ரா) என்ற தலைப்பில் எழுதியருளிய சித்தாந்த சரபம் திருமதி. **கோமதி சூரியமூர்த்தி அம்மையார்** அவர்களுக்கு நன்றி. பாம்பன் சுவாமிகளைப் பற்றியும், முருகப் பெருமானால் அங்கீகரிக்கப்பட்ட அவர்களின் தெய்வப் பாடல்களைப் பற்றியும் **இதுகாறும் 18 நூல்களை** அம்மையார் எங்கள்

வேண்டுகோளை ஏற்று எழுதி அவைகள் வெளியிடப் பட்டுள்ளன.

அம்மையார் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் அவருடைய கணவர் திருவாசகச் சுடர், சித்தாந்தத் தொண்டர் மாமணி, **டாக்டர் செ.ஈ. சூரியமூர்த்தி**, Ph.D., U.S.A. மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் அவர்களுக்கு நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய திரு. அரங்கநாதன் (உரிமையாளர் கிராபிக்ஸ் நிறுவனம்) அவர்களுக்கு நன்றி.

இந்நூல் மூலம் அடியார் பெருமக்கள் பிரதோஷ வழிபாடு மற்றும் மார்கழித் திருவாதிரை (ஆருத்ரா) விழா ஆகியவற்றின் தத்துவ விளக்கங்களை உணர்ந்து இறையருள் பெற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.

இந்நூல் 22.12.2018 மாலையில், சென்னை அண்ணாநகர் அருள்மிகு பிடாரி மகா காளியம்மன் மற்றும் சித்தி விநாயகர் திருக்கோயிலின் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் திருவருள் துணையோடு இலவசமாக வெளியிடப்படும்.

இங்ஙனம்

**திருமதி. நிர்மலா நமசிவாயம்,**
**Information Technology Specialists**

**திருமதி. பவானி பிரேம்பாபு,** **B.E., M.S. (USA)**

**திருமதி. ஜெயலட்சுமி மனோகர்,** **B.E., (USA)**

**திரு. சூரியப்பிரதாபன் நமசிவாயம்,** **B.E., M.B.A., Chennai**

சித்தாந்த ரத்தினம்
பாம்பனார் வாரியார் அடிப்பொடி, சைவத் திருமுறைச் செம்மல்
**திரு. செ.வே. சதாநந்தன்**
(அமரர் நமசிவாயம் அவர்களின் சகோதரர்)
**Chief Refinery Coordinator (Retd.) Indian Oil**
தலைவர், மகாதேஜோ மண்டல சபை (தோற்றம் 1926)
மேனாள் தலைவர் சைவ சித்தாந்த பெருமன்றம் (தோற்றம் 1905)

உ

திருச்சிற்றம்பலம்

# 1. பிரதோஷ வழிபாடு

சித்தாந்த சரபம்
**டாக்டர் வை. இரத்தினசபாபதி** எம்.ஏ., பி.எச்.டி
மேனாள் தலைவர், சைவ சித்தாந்தத் துறை
சென்னை பல்கலைக்கழகம்

1. பிரதோஷ வழிபாடு என்பது பொதுவாக மாலைக் கால வழிபாடு என்ற பொருளையே தரும்.

நாள்தோறும் பகற்காலத்தின் கடைசிப் பகுதியாகிய மூன்றே முக்கால் நாழிகையும் (ஒன்றரை மணிநேரம் - மாலை 4.30 - 6.00) முன்னிரவு மூன்றேமுக்கால் நாழிகையும் (மாலை 6.00 முதல் 7.30 மணிவரை) உள்ள ஏழரை நாழிகைக் காலம் (மூன்று மணி நேரம்)மாலை 4.30-7.30 மணி பிரதோஷ காலம் எனப்பெறும். இந்நேரத்தில் சிவனை வழிபடுவது பிரதோஷ வழிபாடு எனப்பெறும். இதனை நித்தியப் பிரதோஷம் என்று கூறுவர்.

2. பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை வரும் திரயோதசி திதியானது மேலே கூறப்பெற்ற பகற்காலத்தின் இறுதியிலும் முன்னிரவுக் காலத்திலும் (மாலை 4.30 மணி முதல் 7.30மணி வரை உள்ள காலத்தில்) அமையுமானால் அக்காலத்தைத் **பரிதோஷம்** என்றும் **பட்சப் பிரதோஷம்** என்றும் கூறுவர்.

ஒரு மாதத்தில் திரயோதசி திதி மாலை நேரத்தில் பொருந்தி வருவது இரண்டு முறை நிகழும், இக்காலத்தில் செய்யும் வழிபாடுதான் பிரதோஷ வழிபாடு என அனைவராலும் போற்றப் பெறும் வழிபாடாக இன்று அமைந்துள்ளது.

பௌர்ணமியை ஒட்டிய திரயோதசி அமைந்த மாலையும், அமாவாசையை ஒட்டிய திரயோதசி அமைந்த மாலையும் ஆகிய இரண்டும் பட்சப்பிரதோஷங்களே. இவைகளில் சிவ வழிபாடு செய்தல் பட்சப் பிரதோஷ வழிபாடு எனப்பெறும். சிவன் நஞ்சுண்ட பின்னர் இடபதேவரின் இரண்டு கொம்புகளுக்கு இடையில் ஆடிய வரலாறு இந்த நேரத்தில் அமைந்ததால் தான் பட்சப் பிரதோஷங்கள் சிறப்புத் தன்மை பெறலாயின.

3. அமாவாசையை ஒட்டி வருகிற சதுர்த்தசி திதி அமைந்த மாலை நேர வழி பாட்டினை மாதப் பிரதோஷம் என்ற வழக்கு உண்டு.

4. அமாவாசையை ஒட்டி வருகிற திரயோதசி திதி அமைந்த மாலை நேரமானது சனிக்கிழமை அமைந்து விடுமானால் அதனைச் **சனிப் பிரதோஷம்** என்று கூறுவர். சனிக்கிழமைத் திரயோதசியில் தான் இறைவன் இடபதேவரின் இருகொம்புகளுக்கிடையில் நடனமாடினார் என்பது புராண வரலாறு.

5. ஆண்டு தோறும் மாசி மாதத்தில் அமாவாசையை ஒட்டி வருகிற சதுர்த்தசி மாலை நேரத்தைச் **சிவராத்திரி மகாப்பிரதோஷம்** என்றும் கூறுவர்.

**நடைமுறையில் உள்ள பிரதோஷக் கொள்கை**

பௌர்ணமியை ஒட்டியும் அமாவாசையை ஒட்டியும் வருகிற திரயோதசி இணைந்த மாலைக் கால வழிபாடுதான் (மாலை 4.30 மணி முதல் முன்னிரவு 7.30 வரை உள்ள காலம்) பிரதோஷ வழிபாட்டுக்கான காலம் எனக் கொள்ளப்படுகிறது.

சாத்திர அறிஞர்கள் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு, திரயோதசி அமைந்த பகலின் இறுதி முக்கால் மணி

நேரமும் முன்னிரவின் முக்கால் மணிநேரமும் (5.15 முதல் 6.45 வரை) ஆக அமைந்த நேரமே **சிவன் நஞ்சு அருந்திய பின்னர் எழுந்து நடமாடிய காலம் என வரையறை செய்துள்ளனர்.**

பொதுவாக திரயோதசி அமைந்திருந்த மாலைக் கால வழிபாடு சிவன் நஞ்சுண்ட வரலாற்றுடன் இணைந்ததால் பிரதோஷ வழிபாடு என்ற சிறப்பினைப் பெறுவதாயிற்று.

திரயோதசி திதி அமையாத மாலைக்கால வழி பாட்டை இப்போது யாரும் பிரதோஷ வழிபாடு என்று கூறும் வழக்கம் இல்லை.

## சிவன் நஞ்சுண்ட வரலாறு

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தீராத பகை எப்போதும் உண்டு. ஒருவரை ஒருவர் வெல்லும் வழியைத் தேடி அலைவர். அசுரர்களால் தம்முடன் குலமே அழிந்துவிடுமோ என்று நினைக்கிற பயத்தினால் எவர்களாலும் அழிக்கப் பெறமுடியாமல் நித்தியத் தன்மை உடையவர்களாகத் தாம் மட்டுமே வாழ்வதற்கு என்ன வழி என்று கண்டு பிடித்து, அதை அடைந்து வாழ வேண்டும் என்று தேவர்கள் ஆசைப் பட்டார்கள்.

தேவர்கள் அனைவரும் பிரமாவை அணுகித் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள்.

பிரமாவும் தேவர்களுடன் சென்று திருமாலைக் கண்டு செய்தியைக் கூறினார்கள்.

திருப்பாற்கடலைக் கடைந்து அதிலிருந்து வரும் அமுதத்தை உண்டால் இளமையுடன் என்றும் அழியாமல் வாழலாம் என்று ஒருதிட்டத்தை எடுத்துக் கூறினார் திருமால்.

திட்டம் செயல்முறை வடிவம் பெற்றது. மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைவது என்பது செயல் திட்டம். இந்த ஏற்பாட்டை அறிந்த அசுரர்களும் இதில் கலந்து கொள்ள வந்தனர்.

திருமால் தந்திரமாக ஒரு திட்டம் வகுத்தார். தேவர்கள் வாசுகி என்ற பாம்பின் வால் பக்கமும் அசுரர்கள் அதன் தலைப்பக்கமும் நின்று கடைவதென்பதே அத்திட்டம்.

திருமால் ஆமை வடிவெடுத்து, கடலுக்கடியில் சென்று மந்திரமலையாகிய மத்தினைத் தாங்கிக் கொண்டிருந்தார்.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடையத் தொடங்கிய காலம் தசமி திதியன்று காலையில் ஆகும்.

இதுவரையில் நடைபெற்ற செயல்களெல்லாம் சிவனிடம் கலக்காமலேயே நடந்தன.

ஏகாதசியன்று காலையில் வாசுகி என்ற பாம்பானது வலிபொறுக்க முடியாமல் தன்னுடைய ஆயிரம் வாய்களிலிருந்தும் விஷத்தைக் கக்கத் தொடங்கியது.

ஒருநாள் முழுவதும் கடையப் பெற்ற நிலையில் பாற்கடலிலிருந்து விஷம் தோன்றியது.

ஆலம் என்ற சொல் விஷத்தைக் குறிக்கும். வாசுகி என்னும் பாம்பு கக்கிய ஆலமும், திருப்பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட ஆலமும் என்ற இரண்டும் சேர்ந்து ஆலாலம் என அமைந்தன.

இருவகை விஷங்களின் சேர்க்கையானது பரவி, கரும்புகை மண்டலமாகத் தோன்றி, அனைத்து அண்டங்களையும் தாக்கியது.

ஆமை வடிவை நீத்து வெளிவந்த திருமாலின் பளிங்கு நிறமானது நச்சுப் புகை மண்டலத் தாக்குதலால் கருநிறமாக மாறியது.

ஆலாலத்தின் அழிவுக்குத் தாக்குப் பிடிக்காமல் அனைவரும் சிவபெருமானை ( கயிலையை ) நோக்கி ஓடத் தொடங்கினர்.

ஆலால நஞ்சின் தாக்குதலால் திருக்கயிலைமலையில் பிரதட்சிணமாகவும அப்பிரதட்சிணமாகவும் திசைமயங்கி, நிலைகுலைந்து ஓடினார்கள்.

பின்னர்த் தேவர்கள் நந்தியெம் பெருமான் துணையுடன் சிவனை அடைந்து தங்களைக் காத்தருளுமாறு வேண்டிக் கொண்டார்கள். சிவனும் அவர்களைக் காத்தருளவேண்டும் என்று கருணையில் மலர்ந்தார்.

சிவபெருமானுக்குத் திருக்கயிலையில் திருநீற்றுத் தொண்டும், திருமலர்த்தொண்டும் செய்து வரும். அணுக்கத்தொண்டர் **சுந்தரர்**. “மேருவரையின் மேம்பட்ட தவத்தான்” என்ற இறைவனாலேயே பாராட்டப் பெற்றவர். சிவபெருமான் சுந்தரரை அழைத்து, பரந்து விரிந்து மண்டலமிட்டு அச்சுறுத்தும் ஆலால நஞ்சினைத் திரட்டிக் கொண்டு வருமாறு பணித்தார். அவரும் சென்று ஆலால நஞ்சினை ஒருமுகப்படுத்தி, திரட்டி ஒரு நாவற்பழ அளவில் உருண்டையாக்கிக் கொண்டு வந்து, இறைவனிடம் கொடுத்தார். அதனால் அவர் **ஆலாலசுந்தரர்** எனப் பெயர் பெற்றார்.

திருநீற்றுத் தொண்டின் பெருமையால் சுந்தரரை ஆலாலம் அழிக்க முடியாமல் நின்றதோடு, அவருடைய ஆற்றலுக்கு அடிமையும் பட்டது. **திருநீற்றுச் செல்வம் தந்த**

**வளத்தால் சுந்தரின் திருக்கைகளில் எந்த ஒரு கறையும் படவில்லை, எனவே வாழ்க திருநீற்றின் பெருமை!**

சிறிய உருண்டை வடிவில் அமைந்த ஆலாலத்தைத் தம் திருக்கைகளில் ஏற்றுக் கொண்ட சிவன் அதனை எங்கும் வைக்காமல் தன் திருவாயினில் போட்டுக் கொண்டு விழுங்கத் தொடங்கினார்.

தேவர்கள் அஞ்சினார்கள், உடம்பின் உள் சென்றால் சிவனுக்கு அழிவு வருமே என்ற அரைகுறைக் கொள்கையால் வந்த அச்சம் ஒருவகை. நஞ்சினை வெளியில் விட்டாலோ உலகில் உடம்பெடுத்து வாழ்கின்ற அனைத்து உயிர்ப் பொருள்களையும் அது அழித்துவிடுமே என்பது மற்றொருவகை அச்சம்.

**தனக்கு எந்த நிலை ஏற்பட்டாலும் உலகைக் காக்க வேண்டும் என்ற தியாகத்தின் விளைவாக அமைந்ததே அச்செயல் ஆகும்.**

இந்நிலையில் பக்கத்திலிருந்த உமையம்மையார் - முப்பத்திரண்டு அறங்களையும் முறையுற வளர்த்த காரணத்தினால் அறம் வளர்த்த நாயகி என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற உமையம்மையார் தம்முடைய அறந்தழுவு கைகளினால் சிவனாரின் கழுத்தை மெல்லப்பிடித்துத் தடவ, நஞ்சானது மேலும் கீழே செல்லாமல் அங்கேயே தங்கி, அமுதத்தன்மை பெற்றது. இதனால் சிவன் **'நீலகண்டன்'** எனவும் **'கறைக்கண்டன்'** எனவும் காரணப் பெயர் உண்டானது.

**"நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக"**

என இந்நிகழ்ச்சியும், நஞ்சினால் இறவாத தன்மை பெற்றவன் சிவன் என்ற அவனது அளப்பரும் பெருமையும் சங்ககாலத்திலேயே பேசப் பெற்றன.

ஏகாதசியன்று காலையில் நஞ்சு தோன்றியதாகவும், தசமியன்று மாலையே பிரதோஷகாலத்தில் நஞ்சு தோன்றியதாகவும் இருவகைக் கருத்துக்கள் உள்ளன. இரண்டிற்கும் புராண ஆதரவு உண்டு.

ஏகாதசியன்று மீண்டும் பாற்கடலைக் கடைந்தார்கள். முதன் முதலில் வெளிப்பட்டவள் இலக்குமி, திருமால் மணம் புரிந்து கொண்டார். தொடர்ந்து பலபொருள்கள் வெளிப்பட்டன.

ஐராவதம், காமதேனு, கற்பகத்தரு சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி ஆகியவற்றுடன் உச்சைஸ்வரம் என்ற குதிரை, இவைகளையெல்லாம் இந்திரன் முதலான தேவர்கள் தங்கள் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டார்கள். பொருள்களின் தோற்றங்களும் பங்கீடுகளும் ஏகாதசியன்றே நடந்து முடிந்தன.

மறுநாள் துவாதசி திருப்பாற்கடலைக் கடையும் பணியானது தொடர்ந்தது. துவாதசியன்று அமுதம் வந்தது. திருமால் அதை தேவர்களுக்கே பகிர்ந்து கொடுத்தார். அமுதம் உண்ட தேவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

ஏகாதசியின் பிற்பகுதியும், துவாதசியும் ஆகிய இரண்டு நாட்கள் கழிந்த பின்னர்தான் சிவன் நினைவு தோன்றியது. சிவனை நினைக்கவே இல்லையே என்று வருந்திய தேவர்கள் அனைவரும் சிவனைக் காணத் திருக்கயிலை சென்றனர். தங்கள் குற்றத்துக்காக மன்னித்து விடுமாறு சிவபெருமானை வேண்டித்தொழுதார்கள்.

இதுவரை வெளிப்படாதிருந்த சிவபெருமான் அம்பிகை காணுமாறு இடபதேவரின் இரண்டு கொம்புகளுக்கிடையில் அவர் தோன்றி ஆடித்தன்னைப் புலப்படுத்திக் கொண்டார் .

சிவன் இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் ஆடிய நடனம் **சந்தியா நடனம்** எனப் பெயர் பெற்றது.

சிவன் இடபதேவரின் இரண்டு கொம்புகளுக்கிடையில் நடனமாடிய காலம் திரயோதசி அதுவே பிரதோஷ நேரம்.

இந்த நிகழ்ச்சியானது திருக்கயிலையில் நடைபெற்றது. திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் அப்போது திருக்கயிலையில் இருந்து இடபதேவரையும் அவர்தம் இரண்டு கொம்புகளுக்கு இடையில் நடமாடும் சிவபெருமானையும் வழிபட்டுப் பேறு பெற்றார்கள்.

திருப்பாற் கடலைக் கடையத் தொடங்கியது தசமிநாளில் ஆலாலம் தோன்றியதும், அதனைச் சிவன் அருந்தியதும **ஏகாதசி** முற்பகுதி நாளில்

இரண்டாம் முறை, திருப்பாற்கடலைக் கடையத் தொடங்கியதும் பல பொருள்கள் வெளிப்பட, அவைகளைப் பகிர்ந்து கொண்டதும் **ஏகாதசி** நாளில்.

அமுதம் வந்ததும் அதனைத் தேவர்கள் அனைவரும் உண்டதும் **துவாதசியில்**.

நஞ்சுண்ட பிறகு எதிலும் கலந்து கொள்ளாத - காணப் பெறாத சிவபெருமான் இடபதேவரின் இரண்டு கொம்புகளுக்கிடையில் தோன்றிச் **சந்தியா நடனம்** ஆடி மகிழ்வித்தது திரயோதசி திதியின் பிரதோச நேரமாகிய மாலை **5.15 மணி முதல் 6.45** மணி வரை உள்ள காலத்தில்.

## நடைமுறையில் உள்ள பிரதோச வழிபாட்டு முறை

சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் இன்று பிரதோஷ வழிபாட்டு முறை உண்டு.

பௌர்ணமியை ஒட்டி வரும் திரயோதசியிலும் அமாவாசையை ஒட்டிவரும் திரயோதசியிலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை இவ்விழா நடைபெறுகிறது.

கருவறையில் உள்ள இலிங்க மூர்த்திக்கும் எதிரில் உள்ள இடபதேவருக்கும் முறையே திருமஞ்சன ஆராதனைகள் நடைபெறும்.

பின்னர், பிரதோஷ மூர்த்தி அலங்காரம் செய்யப் பெற்றுத் திருமாளிகைச் சுற்றில் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறும். இம்மூர்த்தி ஊர்வலம் மாலை மணி 5.45 க்கு 6.30 க்கும் உள்ள இடைவெளிக் காலத்தில் நடைபெறும்.

**பிரதோஷ மூர்த்தி மும்முறை** வலம் வரும். முதல்முறை வேதபாராயணத்துடன் வலம் வரும். இரண்டாம் முறையில் திருமுறைப் பாராயணத்துடன் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெறும். இரண்டாம் முறை வலம் வரும் போது ஈசான திக்கில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து கர்ப்பூர ஆரத்தி காட்டுதல் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும். மூன்றாவது முறை வலம் வரும் போது நாதசுவர. மேளதாள இசை நிகழ்ச்சி நடைபெறும்.

இடபதேவருக்குச் சிறப்பு ஆரத்தி வழிபாடு நடைபெறும் வெல்லநீர் கலந்த பச்சரிசி (காப்பரிசி) இடபதேவருக்குப் படையல் இடுதல் நியதி. பின்னர் அது மக்களுக்கு வழங்கப் பெறும்.

இவையணைத்தும் திருக்கோயில் சார்புடைய நிகழ்வுகள்.

## பக்தர்கள் வழிபடும் முறை

துவாதசி நாளின் இரவு உணவு உண்ணுதல் கூடாது. உலக உயிர்களின் நன்மை பொருட்டு நஞ்சு அருந்தியதன்

மூலமாக அனைத்துயிர்களையும் பிறவற்றையும் அழியாமற் காத்து அருள் செய்த தலைமையுடையவனே சிவபெருமான் என எண்ணி அவனைச் சிந்தையில் இருத்தியே நித்திரை செய்தல் வேண்டும்.

திரயோதசி நாளன்று அதாவது பிரதோஷ நாளன்று மாலை வழிபாடு முடியும் வரை உணவு உண்ணுதல் கூடாது.

மாலையில் ஆலயம் சென்று கருவறை இலிங்கமூர்த்திக்கும், உடனுறை நாயகிக்கும் சிறப்புத் திருமஞ்சன வழிபாடுகள் செய்விக்கலாம். இடபதேவருக்குச் சிறப்புத் திருமஞ்சன மாட்டி, அறுகம்புல் மாலை அணிவித்து, நெய்விளக்கு அமைத்தால் வாழ்க்கையில் மனநிறைவும் இன்பவளமும் அமையும்.

வெல்லம் கலந்த காப்பரிசியை இடபதேவருக்குப் படைத்தல் வேண்டும்.

இடபதேவரின் இரு கொம்புகளின் நடுவில் உள்ள இடைவெளியின் மூலமாகச் சிவனை வணங்குதல் வேண்டும்.

வழிபாடு முடிந்த பின்னர் இல்லம் வந்து துறவியர், சாதுக்கள் இருவருக்கோ, பலருக்கோ அன்னமிட்டுத் தாமும் உண்டு பிரதோஷ வழிபாட்டை நிறைவு செய்தல் வேண்டும்.

**பிரதோஷ காலத்தில் வலம் வரும் முறை**

பிரதோஷ காலத்தில் திருக்கோயில் பிராகாரத்தில் வலம் வருவதற்குத் தனிமுறை விதிக்கப் பெற்றுள்ளது.

ஆலாலம் அனைவரையும் அழிக்க முற்பட்டுக் கிளர்ந்தெழுந்த காலத்தில் தேவர்கள் திருக்கயிலைக்கு ஓடினர்.

அங்கே தேவர்கள் கையிலையை வலமாகச் சுற்றிப் போக முற்பட்டபோது நஞ்சு எதிர்ப்பட்டது. தேவர்கள் அஞ்சி இடமாக ஓடினர். அங்கேயும் நஞ்சு வந்து அச் சுறுத்தியது. புகலிடம் தெரியாத தேவர்கள் அங்குமிங்கும் அலைந்து பிரதட்சண மாகவும் அப்பிரதட்ணமாகவும் ஓடினர். அதைக் குறிக்கும் முறையில் வலமாகவும் (பிரதட்சிணம்) இடமாகவும் (அப்பிரதட்சிணம்) பிராகாரத்தில் சுற்றிவரும் முறை அமைக்கப் பெற்றுள்ளது.

முதலில் இடபதேவரைத் தரிசித்து, இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, சென்ற வழியே திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்தல் வேண்டும்.

பின்னர் அங்கிருந்து வலப்பக்கமாகச் சென்று வடக்கே சென்று கோமுகி ( திருமஞ்சன நீர் வரும் வழி ) யைக் கடவாது, திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்தல் வேண்டும்.

பின்னர் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, அங்கிருந்து திரும்பி, வந்த வழியிலேயே வந்து. இடப தேவரைத் தரிசியாமல் வலமாகச் சென்று கோமுகியைச் சேர்ந்து. அங்கிருந்து திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, அங்கிருந்து திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்புகளுக்கு நடுவே இலிங்கமூர்த்தியைப் பார்த்து வணங்குதல் வேண்டும். அவ்வாறு வணங்கும் போது. பிரணவத்தையோ, திருவைத் தெழுத்தையோ, பஞ்சாக்கரப் பதிகத்தையோ ஓதி வணங்குதல் வேண்டும்.

இவ்வளவும் செய்தால் ( ஒரு வலம் ) ஒரு பிரதட்சிணம் இவ்வாறு மூன்று முறை செய்தல் வேண்டும். இதனைக் சோமசூக்தப் பிரதட்சணம் என்பர் ஆகம நூலார்.

பிரதோஷ காலத்தில் வலம் வரும் முறை நூலின் பின் அட்டை உட்புறத்திலுள்ள வரைபடத்தில் காண்க.

**பிரதோச வழிபாட்டின் பயன்**

உலகை அழிக்கப் புறப்பட்ட நஞ்சினை ஏற்று, அருந்தி உலகை உய்வித்ததன் அடிப்படையில் எழுந்த வழிபாடு ஆதலின் இது இறைவனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் அமைந்த வழிபாடே.

மேலும் **இவ்வழிபாட்டினால் இன்றுள்ள மக்கள் வாழ்வியலில் உண்டாகும் குறைகள் நீங்கும், பகை விலகும், வாழ்வியலில் அமைதி உண்டாகும்.**

தேவர்களும் சிவத்தலங்களுக்கு வந்து பிரதோஷ வழிபாடு செய்கிறார்கள். வழிபாடு செய்யும் மக்களுக்கு அவர்கள் தாங்களே முன்வந்து பல உதவிகளையும் செய்வதால், மக்கள் நன்மை அடைகிறார்கள்.

**பிரதோஷ வழிபாட்டை விரதமிருந்து முறையுறச் செய்தால் வறுமையும் அச்சமும் நீங்கி மரணவேதனை தவிர்த்து, மகேச வாழ்வு பெறலாம்.**

இரணம் நல்குரவு இரும்பவம்
பசி உரோகம்
அரண் அறும் பயம் கிலேசம்
கேதம் அவமிருத்து
மரணவேதனை இவையெலாம்
அகற்று என வணங்கிப்
புரணநாதனைப் பிரதோடத்திற்
போற்றிடத் தகுமால்.

- கடம்பவனப் புராணம்

**பாடலின் பொருள்:** பண்கள் பலவற்றைத் தோற்றி வருத்தும், நோய், வறுமை, வருத்தும்பிறப்பு, பசிநோய், பாதுகாப்பில்லை என்ற பயம், துன்பம், அவப்பெயர், பழியை உண்டாக்கும் இறப்பு, இறப்பு வந்தது போன்ற துன்பம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் நீக்கு என்று கூறி வணங்கி, முதன்மை முழுமையான நாதனைப் பிரதோஷ காலத்தில் வணங்குதல் தகும்.

திருச்சிற்றம்பலம்

**சமுதாய ஆன்மீக நோக்கில்**

# 2.0 பிரதோஷ வழிபாடு

## தத்துவமும் சமயமும்

தத்துவம் என்ற சொல்லானது கொள்கையைக் குறிக்கும். கொள்கையானது பலவகைப்படும். வாழ்வியற் கொள்கை, சமுதாயக் கொள்கை, அரசியற் கொள்கை, ஆன்மீகக் கொள்கை என்றாற் போல.

வரைமுறைப்படுத்தப் பெற்ற எண்ணங்களின் அல்லது கருத்துக்களின் தொகுப்புத்தான் கொள்கை, கொள்கைகளின் செயல்பாட்டு முறைகளே '**சமையம்**'.

சமைதல் - பக்குவப்படுதல்; சமைத்தல் பக்குவப் படுத்துதல். கொள்கைகளைச் செயற்படுத்துதல் மூலம் பக்குவப் படுதலே, அல்லது பக்குவப்படுத்துதலே சமையம். அதுவே சமயம் என நின்றது. இதற்கு வேறு பொருளும் கூறுவர்.

வாழ்வியலின் நாயகன் ஆன்மா அல்லது உயிர். ஆன்ம வாழ்வியலில் நெறிமுறைப் படுத்தப் பெற்ற கொள்கைகளே தத்துவம். அதனைச் செயற்படுத்திப் பக்குவப் படுதலே சமையம்.

கொள்கைத் தொகுப்பும் (தத்துவம்) செயல்முறை விளக்கப் பாடும் இணைதல் வேண்டும். இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

## இரண்டு வழிகள்

1. கொள்கைத் தொகுப்பை வைத்துக் கொண்டு செயல் முறைப்படுத்தப் பக்குவம் பெறுதல் ஒருவகை. இது சமையற்கலைப் புத்தகத்தை வைத்துக் கொண்டு சமைத்து அனுபவிக்கும் முறை அல்லது வழியைப் போன்றது.

2. சமைத்துச் சமைத்துப் பக்குவப்பட்டதன் மூலம் சமையற் கலையை வரையறை செய்யும் முறை அல்லது வழி ஒன்று உண்டு. இவற்றை நாளிதல் திங்கள், வார இதழ்களில் வரும் சமையல் குறிப்பு; பாட்டி சமையல் போன்றவை. இதைப்போலவே சமயத்தின் மூலம் கொள்கை வரையறையையும் செய்யலாம். இது இரண்டாவது வகை.

ஆன்ம வாழ்க்கையிலும் இத்தகைய இரண்டு வழிகள் உள. ஆன்மாவின் உய்திக்காக - உயர்வுக்காக வேண்டப் பெறும் கொள்கைகளைத் தொகுத்து வைத்துக் கொண்டு செயல் முறைப் படுத்தி அனுபவித்தல் ஒரு முறை.

செயல் முறைப் படுத்திப் பார்ப்பதன் மூலம் ஆன்ம இயற் கொள்கைகளை வரையறைப்படுத்திக் கொள்வதும் ஒருவழி.

## வழிபாடும் வழிப்பாடும்

வழிபாடு என்பது ஒரு தெய்வத்தையோ மனிதனையோ, பொருளையோ தன்னை விட உயர்வுடையதாகப் போற்றி வணங்கும் முறை.

வழிப்பாடு என்பது மேலே குறிப்பிடப் பெற்ற ஒன்றன் கொள்கைகளை வரையறைப்படுத்திக் கோவையாக அமைத்துக் கொண்டு, அதனைப் போற்றுவது.

வழிபாடும் வழிப்பாடும் ஒரே பொருளைப் பற்றியும் இருக்கலாம், வேறாகவும் அமையலாம். இரண்டனுள் ஒன்று இருந்து ஒன்று இல்லாமலும் போகலாம்.

வழிபாடும், வழிப்பாடும் இணைந்து நில்லாத காலங்களில் தான் சமுதாயச் சீர்கேடும் தனிமனிதச் சீர்கேடும் நிலவிக் கால்கொண்டு விடும்.

வழிப்பாடு இல்லாத வழிப்பாட்டுக்குச் செயல் தன்மை இன்மையால் முடம் போன்று மூலையில் ஒதுக்கப் பெற்றுவிடும். நாளடைவில் மறைந்தே போய்விடும்.

## ஆன்மாவின் வழிப்பாடும் வழிபாடும்

நிலைத்திணை, இயங்குதிணை (தாவரம், சங்கமம். அசையாப் பொருள் அசையும் பொருள்) என்ற இருவகைப் பிறப்புகளிலும் அமைந்துள்ள மூலப் பொருளாகிய உயிரைத்தான் ஆன்மா என அழைக்கிறோம்.

உடம்பினுள் நின்று வாழ்வது, உய்வது, உயர்வது எல்லாம் ஆன்மப் பொருளுக்கே, உடம்பு ஒரு கருவிதான்.

ஆன்மாவின் வழிப்பாட்டுக்கும் வழிபாட்டுக்கும் உரிய பொருள் பரம ஆன்மா எனப் பெறும் கடவுளே. உருவமற்ற, எல்லையற்ற, பரம ஆன்மப் பொருளை அடைய வேண்டும் என்பதே வழிப்படுதல் முறை ஆன்மாவுக்கு, பரம ஆன்மாவை உருவம், பெயர் முதலியவைகளுக்கு உட்படுத்தித்தான் கொள்கை விளக்கம் செய்து வழிப்படுதல் வேண்டும்.

வழிப்படுதல் என்ற கொள்கை உருவான பின்னர் வழிபடுதல் அமைய வேண்டும். அதுவே முறை.

**சைவத்தில் வழிப்படுதலும் வழிபடுதலும்**

சைவம் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்ட நிலையில் வழிப்பாடும் வழிபாடும் கொண்டு விளங்குவது.

சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டு ஆன்மாவானது அவனை அடைந்துய்வதே கொள்கை. இதுவே சைவ வழிபாட்டு முறை.

சைவ வழிபாட்டு முறையில் பல்வேறு வகைப்பட்ட விரதங்களும், விழாக்களும் ஆன்றோர்களால் அமைத்துக் கொடுக்கப் பெற்றுள்ளன. அவைகளெல்லாம் வரலாற்றை மையமாகக் கொண்டு அமைக்கப் பெற்றவை.

விரதங்களும் விழாக்களும் வழிபாட்டு முறைகளாகக் கொண்டு அமைக்கப் பெற்றாலும் அவையெல்லாம் சமுதாய நன்மைகளையும் நன்றியுணர்வுக் கடமைகளையும் உள்ளீடாகக் கொண்டு ஒரு காலத்தில் அமைக்கப் பெற்றவைகளே. ஆனால் அவையெல்லாம் இன்று பயன் விளைவிக்கும் – பயனை எதிர்பார்த்துச் செய்யப்பெறும் குறிக்கோளுடையவைகளாகவே மக்களால் கணிக்கப் பெற்றும் எழுதப் பெற்றும் வருகின்றன.

சிவநெறி சார்ந்த வழிபாடுகள் பலவுள. நாள் வழிபாட்டைத் தவிர, விரதங்களும் நோன்புகளும், விழாக்களும் ஆக இப்படிப்பட்ட பல்வேறு வழிபாடுகளைக் கொண்டு விளங்குவது சிவநெறிக் கொள்கை. அவைகளுள் ஒன்று பிரதோஷ வழிபாடு.

## 2.1 சமுதாய நோக்கில் பிரதோஷ வழிபாடு

மனிதன் வாழ்பவன்; வாழவேண்டியவன், உலகம் என்பது மனிதனை மட்டும் அடைத்துக் கொண்டிருக்கும் பெட்டகம் அன்று. வாழ்வியற் பொருள்கள் பலவற்றையும் தன்னுள் அமைத்துக் கொண்டிருக்கிறது உலகம்.

மனிதன் தன்னுடன் அமைந்துள்ள வாழ்வியற் பொருள்களைத் தன்னுடைய வாழ்வை வளமாக்கிக் கொள்வதற்காகப் பயன்படுத்த முற்படுகிறான். நேராகவும் பயன் படுத்துகின்றான். பொருள்களைப் பல்வேறு வகைகளில் மாறுபடுத்தி, செயற்படுத்திப் புதிய பொருள்களை அல்லது ஆற்றல்களை உருவாக்கி அவைகளைத் தன்னுடைய வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்கிறான்.

மனிதன் தனக்கு அயலான பொருள்களை நேராகப் பயன்படுத்தினாலும் வேறுபடுத்திப் பயன் கொண்டாலும் கழிவுப் பொருள் ஒன்று உண்டாகும். நாளடைவில் அது வளர்ந்து அவனுக்கே பெருங்கேட்டினை உண்டாக்கும்.

மனிதன் தாவரப் பொருள்களை உணவாக உண்கிறான். தாவரப் பொருள்களிலும் கழிவு உண்டாகிறது. உண்டபிறகு அவன் உடலிலும் கழிவு உண்டாகிறது. கழிவுப் பொருளை அழிக்க முடியாமையால் மலத்தேக்கம், சிறுநீர்த்தேக்கம் ஆகியவைகளால் சுற்றுச் சூழல் கெடுக்கப்படுகிறது. சுற்றுச் சூழல் கேடுகள் இன்று மனிதன் வாழ்வையே நிலைகுலையச் செய்கின்றன.

தேவரும் அசுரரும் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள் திருப்பாற்கடல் இயற்கைப் பொருள்தான். இயற்கையாக இருப்பதை இயக்கும் போது புதிய ஆற்றல் தோன்றலாம். இயக்கதினால் வெளிப்படும் தேவையற்ற ஆற்றல் தான் நஞ்சு.

அது ஒருவகைக் கழிவு, அமுதத்தைவிட நஞ்சு கொடுமை யானது.

தொழிற் சாலைகளினால் இன்று நாம் பெறும்பயன் அதிகம். ஆனால், அதே சமயம் அவைகளினால் ஏற்படும் கழிவுகளை அழித்தொழிக்க நாம் வழிமுறை காணாமையால் மனித இனமே சுற்றுச்சூழல் கேடுகளுக்குத் தன்னை – தன் வாழ்வியல் நலத்தைப் பலியாக்கிக் கொண்டு வருகிறது.

நஞ்சை அழிக்க வழிவகை காண வேண்டும், கழிவுப் பொருளை அழிப்பது இன்று மனித இனத்துக்குப் பெரிய பிரச்சினை, கழிவுப் பொருளை வெளியிடத்துக்குச் செலுத்திவிட்டால் போதும் என்று தொழிற்சாலைகள் நினைக்கின்றன. ஆனால் அவை எங்கே நிலை கொள்ளுகின்றனவோ அங்கே உள்ளவைகளை அது அழித்து விடும் தொடக்கத்திலேயே கழிவுப் பொருளை அழிப்பதற்கு வழிவகை காணவில்லையானால் அது ஏனைப் பொருள்களை அழிக்கத் தொடங்கிவிடும். அதுவே திருப்பாற்கடல் கடைதலில் நஞ்சு தோன்றிய வரலாறு.

தன்னேரில்லாத் தலைமைக் கடவுள் என நின்ற சிவன் அந்நஞ்சினை எங்கே வைத்தாலும் அது அனைத்தையும் அழிக்கும் என்று கருதி, அதை தானே விழுங்கித் தன்னையே அழித்துக் கொள்ள முற்பட்டான். அவனுடைய பேராற்றல் தன்மையால் விளைந்தது வேறு. ஆனாலும் அனைத்துயிர்க்கும் கருணை காட்டித் தன்னைத் தியாகத்தீயில் இணைத்துக் கொண்ட பெருமையினால் திருநீலகண்டன் என நின்றான்.

**'திருநீலகண்டம்'** என்ற சொல்லே மங்கள மொழியாய் மந்திர மொழியும் மாக ஆயிற்று. திருநீலகண்ட நாயனார் வரலாற்றில் இதுவே மந்திர மொழியாய் நின்று மாபெரும் வரலாற்றினை உண்டாக்கியது.

இறைவன் நீலகண்டன் ஆனதால் தேவர்கள் அமுதம் பெற்று அழியாமையும் (அமரத்வம்) இளமையும் பெற்றார்கள். 'நீலகண்டம்' என்ற சொல்லைச் சொல்லியே அழியா இளமை பெற்றனர் திரு நீலகண்ட நாயனார் தம்பதியினர்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்ற தொல்காப்பிய நூற்பாப்படித் "திருநீலகண்டம்" என்பதை ஆணை மொழியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் திருநீலகண்ட நாயனார். **திருநீலகண்டம்** என ஓதி நின்றால் யாரும் அழியா இளமை பெறலாம் என்பதும் தேவை.

சுற்றுச் சூழல் கேட்டினை நீக்குதல் என்ற இந்நாட் கொள்கையை – சமுதாயப் பார்வையை உள்ளீடாகக் கொண்ட அரும் பெரும் புனிதச் செயலே சிவன் நஞ்சுண்ட வரலாறு.

## 2.2 ஆன்ம இயல் ( ஆன்மீகம் ) நோக்கில் பிரதோஷம்

### 1. பிரதோஷம் என்ற சொற் பொருள் பற்றியது.

இற்றை நாளில் இருபத்து நான்கு மணி நேரத்தைக் கொண்ட ஒரு நாளில் மூவகைச் சந்திக் காலங்கள் உண்டு.

(அ) காலையில் இரவு நீங்கி ஒளி மெல்ல உயரும் நேரம். இதைப் புனிதக் காலம் என்பர். இங்கு இருள் நீக்கமும் ஒளிப் பெருக்கமும் ஆகிய சந்திப்பு நிகழ்கிறது. ஆனால், சந்திக் காலம்

என்றாலும் புண்ணியக் காலம், நற்காலம் என்றே இது போற்றப் பெறும். திதி, வாரம், நட்சத்திரம், யோகம் முதலிய எக்குறைகள் இருந்தாலும் அவைகளைக் கருதாமல் இந்நேரத்தில் நற்காரியம் என்பதையும் தொடங்கலாம் என்பது பொது விதி.

(ஆ) நண்பகலில் சூரியன் ஏற்றம் 12 மணிவரை. பின்னர் இறங்குமுகம். இங்கே ஒரு சந்திப்பு உண்டு. **அந்தச் சந்திப்புக் காலத்தை காலை 11.30 முதல் 12.30 வரை கொள்வர். இக்காலத்தே திருவருள் வீழ்ச்சி உண்டு. அனைத்துயிர் களையும் நோக்கித் திருவருள் பதியும் காலம். அதனால் தான் இக்காலத்தே மாகேசுவரபூசை நடத்துதல் வேண்டும் என்பது விதி.** வணிக நிலையங்களில் இக்காலத்தை புதுக் கணக்கு எழுதுவார்கள். நாள்கள் கோள்கள் நிலை இங்கேயும் அனுசரித்தல் இல்லை. இது அருள் வீழ்ச்சிக்காலம். இதுவும் நற்காலமே.

(இ) மாலையில் ஒளி நீக்கமும் இருள் ஆக்கமும் இணைகின்ற காலம். ஒளியானது சாயுங்காலம். இது இப்போது சாயங்காலம் ஆயிற்று. இந்தக் காலமும் சந்திக்காலமே. இது குறைப்படுத்தும் காலம். அதனால் தான் இந்நேரத்தில் எக்காரியமும் செய்தல் கூடாது. இந்தக்காலத்தில் வீட்டைப் பெருக்குதல், உணவுண்ணுதல். படுத்தல் முதலியவை களுங்கூட ஆகா. விளக்கேற்றி இறைவனை வழிபட்டுக் காலக்குறையை நீக்கிக் கொள்ளுதல் ஒன்றே செய்யப் பெறவேண்டும்.

இங்கே குறிப்பிடப் பெற்ற மூவகைச் சந்திக்காலங்களில் எக்காரியமும் செய்யக்கூடாது என விலக்கப் பெற்ற காலம் மாலைச் சந்தியே ஆதலின் அக்காலம் பிரதோஷம் எனப் பெயர் பெற்றது.

தசமி அன்று நஞ்சருந்திய செயல் நடைபெற்றதும் பிரதோஷ காலமே.

திரயோதசி அன்று சிவன் இடபதேவரின் இருகொம்பு களுக்கிடையே சந்தியா தாண்டவம் ஆடி உயிர்களுக்கு உய்தி ஏற்படுத்தியதும் இந்த மாலைக் காலமே.

பிரதோஷ காலமானது பரிதோஷ காலமாக மாற்றம் பெற்றது. திரயோதசி நாள் மாலை மட்டுமே பரிதோஷ காலமாகும்.

நாள் தோறும் வரும் மாலைச் சந்திக் காலம் தோஷ காலமே.

தசமி திதியில் வரும் மாலைச் சந்திக்காலம் பிரதோஷக் காலமே அந்த நேரத்தில் நஞ்சு தோன்றி உலகை அழிக்க முற்பட்டது. அதைச் சிவன் ஏற்று நீலகண்டன் ஆனான். (இவ்வாறு கொள்வது பொருத்தமானது).

திரயோதசி திதியின் மாலைக் காலம் இறைவன் இடபதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் சந்தியா நடனம் ஆடி உயிர்களை மகிழ்வித்த காலம் பிரதோஷ காலம் ஆகும்.

**இடபதேவரின் இருகொம்புகளுக்கிடையில்**

**திருக்கோயில்களில் சிவலிங்கத்தின் முன்னர் அமைக்கப் பெற்றுச் சிவனையே பார்த்துக் கொண்டிருப்பதாக உள்ள நந்தியை வாகனமாகக் கொள்ளுவது கூடாது.**

பாசத்தை நீத்த – முத்திபெற்ற ஆன்மாவையே திருக்கோயிலில் இடபதேவராகக் கொள்ளவேண்டும் என்பது ஆகமம். அவருக்கு ஒரு கொம்பு ஞானம்; அடுத்த கொம்பு கிரியை, தனி ஞானத்தாலும் இறைவனைக் காண முடியாது. தனிச் செயலாலும் இறைவனைக் காண முடியாது. இரண்டும்

இணையவேண்டும். இரண்டும் இணைந்த இடத்தில் தான் சிவன் என்ற பரம்பொருள் வெளிப்படும் என்ற கருத்தில் இரண்டு கொம்புகளுக்கிடையில் இலிங்க மூர்த்தியைக் காண வேண்டும் என்றும் இரண்டு கொம்புகளுக்கிடையில் தான் இறைவன் நின்று சந்தியா தாண்டவம் ஆடினான் என்றும் தத்துவ உண்மை விளக்கம் செய்யப்பெற்றது.

இதனால் இறைவனை நேர் நின்று காணல் என்ற வழிபாடு தோன்றுகிறது. இதுவே ஆன்மாவும் இறைவனும் செம்மையில் நின்று இணைந்தமுறை எனக் கொள்ள வேண்டும்.

**அதோமுகச் சிறப்பு**

இலிங்க மூர்த்திக்குப் பொதுவாக ஐந்து முகங்கள் உண்டு.

**தற்புருடன்**; கிழக்கு நோக்கியது. இது வாகனத்தில் வரும் வடிவமாக அமையும்.

**அகோரமுகம்**; இது தெற்கு நோக்கிய முகம். இதன் வழிபாடு அசையாத இலிங்க முகத்தில் அமையும்.

**வாமமுகம்**; வடக்கு நோக்கியது. இதன் வழிபாடு அமர்ந்திருந்த கோலத்தில் அமையும்.

**சத்யோசாதம்**; மேற்கு நோக்கியது. இதன் வழிபாடு நின்ற கோலமாக இருந்த மூர்த்தில் அமையும்.

**ஈசானமுகம்**; வடகிழக்கை நோக்கியது. இது நடன கோலத்தில் வழிபடப் பெறும் மூர்த்தியாகும் நடன காலத்தில் வழிபடப் பெறும் மூர்த்தங்கள் ஈசான முக மூர்த்தங்களாகும். இதனாலேயே பிரதோஷ காலத்தில் ஈசான மூலையில் ஈசான

முக வழிபாடு அமைக்கப் பெறுகிறது. இதனை மேல் நோக்கிய முகமாகவும் கொள்வர்.

இங்கே கூறப் பெற்ற முகங்களுக்கு மேலாக ஒருமுகம் உள்ளது. அது அதோமுகம் எனப்பெறும். அதைக் கீழ்நோக்கிய முகம் என்பர். அது அருளே வடிவமானமுகம். இந்த அதோமுகத்தை வழிபட வேண்டுமானால் அதனைப்படுக்க வைத்த கோலத்தில் அமைத்தே வழிபட வேண்டும்.

ஆலகால நஞ்சினை நேராக நின்று ஏற்றுக் குடித்த முகம் அதோமுகமே. அதோ முகம் நேர்நின்று செய்த செயல்கள் இரண்டு. ஒன்று ஆல கால நஞ்சினை நேர்நின்று, ஏற்று, கண்டங்கறுத்ததன் மூலம் உலகைக் காத்தது. ஆறுமுகப் பெருமானாக வெளிப்பட்டுச் சூரபதுமனை அழித்தது இரண்டாவது.

அதோ முகமே தரிசனத்துக்கு உரியது என்றும், அதுவே நஞ்சுண்டமுகம் என்றும் ஆறு திருமந்திரங்களால் போற்றி வணங்குகின்றார், திருமூலர். (அதோமுக தரிசனம் பார்க்க).

அதோமுகம் நஞ்சினை ஏற்ற திருமுகம் ஆதலாலும் அது படுத்திருந்த கோலத்தில் வழிபடப் பட வேண்டிய முகம் ஆதலாலும் நஞ்சுண்ட மூர்த்தத்தை வணங்கும் முறையில் சிவன் படுத்திருந்த கோலத்தைச் சிற்பமாக அமைத்தனர். இதுவே சுரட்டப்பள்ளியில் உள்ள திருக்கோலம். நஞ்சுண்ட பின்னர், சிவன் மயங்கிச் சாய்ந்து கிடக்கிறான் என்பது பரம் பொருளுக்குப் பொருந்தாது.

ஆந்திர மாநில எல்லையில் ஆரணி நதிக்கரையில், சுரட்டப்பள்ளி என்ற ஊரில் அமைந்த ஆலயம். சிவன் கோவில் மூலவர் பள்ளி கொண்டிருந்த கோலம். இது அதோ முக தரிசனக் கோலம். இவரை "விஷாப கரணர்" எனக் கூறுவர்.

சிவன் படுத்திருக்க, திருமால் முதலானவர்கள் அவன் காலடியில் அமர்ந்திருக்கும் கோலம். இது அதோமுகம் சயனித்த கோல வழிபாட்டு மூர்த்தமாக, நஞ்சருந்திய வரலாற்றைக் குறிப்பிடும் காட்சியருளுகிறது.

சிவஞானிகள் இருதய கமலத்தில் மட்டுமே அனுபவப்படும் அதோமுகம் இங்கே சிற்பமாக வடிவமைக்கப் பெற்றிருக்கிறது.

கேரளத்தில் உள்ள ஓர் ஆலயத்தில் சிவன் படுத்திருக்க விஷ்ணு முதலான தெய்வங்கள் அவர் காலடியில் அமர்ந்திருப்பதாக அமைந்த ஓவியம காட்சி ஒன்று உண்டு என்றும்,

சங்கரநாயனார் கோயிலுக்கும் கோவில் பட்டிக்கும் இடையில் உள்ள கழுகுமலையில் விஷாபகரணர் சிற்பம் முடிவு பெறாத நிலையில் உள்ளது என்று திரு. வெ. நாராயணஸ்வாமி அவர்கள் தம்முடைய பிரதோஷ வழிபாடு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவையெல்லாம் அதோமுகச் சிற்பகங்களே என்று கொள்ளுதல் வேண்டும்.

நாகம் தான் கயிறு ஆக நளிர்வரை அதற்கு மத்தாகப்
பாகம் தேவரோடு அசுரர் படுகடல் அளறு எழக் கடைய
வேக நஞ்சுஎழ ஆங்கே வெருவொடும் இரிந்து எங்கும் ஓட
ஆகம் தன்னில் வைத்த அமிர்தம் ஆக்குவித்தான் மறைக்காடே

– திருஞான சம்பந்தர்

'நாகம் தான்' எனத்தொடங்கும் பாடல் திருஞான சம்பந்தர், 'திருமறைக்காடு' (வேதாரண்யம்) என்ற தலத்தில்

அருளியது. இரண்டாந்திருமுறை 91 ஆம் பதிகத்தின் ஏழாவது பாடல்.

பொருள்: வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு, குளிர்ச்சியுடைய மந்தரமலையை மத்தாகக் கொண்டு, ஒருபாகம் தேவர்கள், மற்றொருபாகம் அசுரர்கள் பிடித்துக் கொண்டு, அந்தக் கடலானது சேறுமேலழக் கடைந்த போது, அதிக வீரியமுடைய நஞ்சு எழுந்தது. எழவே தேவர்களும் அசுரர்களும் தாறுமாறாக வாய் பிதற்றிக் கொண்டு ஓட, அந்த நஞ்சினை ஒன்று சேர்த்துத் தன்னுடைய மார்பில் வைத்து அமுதமாக ஆக்குவித்தவன் இருந்து அருள்புரியும் இடம் திருமறைக்காடே.

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்று எழுந்த
**ஆலாலம் உண்டான்** அவன் சதுர்தான் என்னேடி
ஆலாலம் உண்டிலனேல் அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

**- மாணிக்கவாசகர்.**

'கோலாலமாகி' என்று தொடங்கும் பாடல் மாணிக்க வாசகர் அருளிய திருவாசகப் பாடல், 'திருச்சாழல்' என்ற பன்னிரண்டாவது தலைப்பில் அமைந்த எட்டாம் பாடல் தில்லையில் அருளப் பெற்றது. தில்லையில் வாதத்துக்கு வந்த புத்ததுறவிகளை வெல்லும் நிகழ்ச்சியில் வினாவிடையாக அமைந்தது இப்பதிகப் பாடல். (நிகழ்ச்சி விரிக்கிற் பெருகும்).

பொருள்: கோலாகலமாக நின்று தேவர்களும் அசுரர்களும் ஒலியை எழுப்புகின்ற அலைகளையுடைய கடலின் முன் நின்று கடைந்த போது தோன்றிய ஆலகால விஷத்தை உண்டானே, அந்த இறைவனுடைய ஆற்றல்தான்

என்னேடி என்று ஒரு பெண் கேட்க, **ஆலகால நஞ்சினை அன்று அவன் உண்ணவில்லையானால், அப்பொழுதே பிரமனும், திருமாலும் உள்ளிட்ட அனைத்துத் தேவர்களும் அழிந்து போயிருப்பார்கள்** என்று விடை கூறினாள் மற்றொரு பெண்.

சாழல் என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று.

திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் பாடல்கள் கடல் கடைந்து, அதனால் எழுந்த விஷத்தைச் சிவன் உண்டான் என்ற வரலாற்றுக்குச் சான்றுகளாக அமைந்தவை.

திருச்சிற்றம்பலம்

## 3. திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் திருநெடுங்களம்

'திருநெடுங்களம்' என்பது தலத்தின் பெயர். இக்காலத்தே இது திருநெட்டான்குளம் என வழங்கப் பெறுகிறது. சுவாமியின் பெயர் நித்திய சுந்தரர்; தேவி ஒப்பிலாநாயகி, தஞ்சாவூர் திருச்சி, புகைவண்டிப் பாதையில் 'தொண்டைமான் பட்டி' நிலையத்திலிருந்து தெற்கே 2 கல் தொலைவில் உள்ள தலம்.

'மறையுடையாய்' என்று தொடங்கும் பாடலை முதலாகக் கொண்ட பதிகத்தைப் பாடியவர் திருஞானசம்பந்தர். முதல் திருமுறையில் 52 ஆம் பதிகம்.

இப்பதிகத்தின் இரண்டாம் பாடலில் கடலில் எழுந்த நஞ்சினை உண்ட வரலாறு கூறப்படுகிறது.

பொதுவாக இந்தப்பதிகமானது பழைமையான வினைகளை முற்றாகத் தீர்க்கும் ஆற்றல் உடையதாகக் கருதுவது சைவமரபு.

நெடுங்களம் என்ற தொடர் தலத்தைக் குறிப்பதோடு 'நெடியநஞ்சு' என்பதையும் குறிக்கும். ஆதலால் பதிகம் முழுவதும் இங்கே அமைக்கப் பெற்றது.

வினைப்பாவம் அறுந்து திருவருள் நலம் நாடத் துணையாய் அமைந்தது இத்திருப்பதிகம். நஞ்சு ஏற்றதை நினைவுறும் பதிகம். பிரதோஷகாலத்தில் படிக்க வேண்டிய பதிகம் இதுவே.

மறை உடையாய் தோல் உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய் பிஞ்ஞகனே என்று உனைப்பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர்களையாய் நெடுங்களம மேயவனே.

**கனைத்து எழுந்த வெண் திரை சூழ் கடலிடை நஞ்சு தன்னைத்**
**தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை**
மனத்தகத்தோர் பாடல்ஆடல் பேணி இராப் பகலும்
நினைத்து எழுவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்று அடற் கூற்று உதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

மலைபுரிந்த மன்னவன் தன் மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடை ஆரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவ நின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

பாங்கின் நல்வார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ நின்தாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்கு உணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடை மேல் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியினையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

கூறுகொண்டாய் மூன்றும ஒன்றாக் கூட்டியோர் வெங்கணையாம்
மாறுகொண்டாய் புரம் எரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடி மதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர் கோனை அருவரைக் கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

வேழ வெண் கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேட ஆங்கோர் சோதியுளாகி நின்றாய்
கேழல் வெண்கொம்பு அணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

வெஞ்சொல் தஞ்சொல்லாக்கி நின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சம இல்லாச் சாக்கியருந் தத்துவம் ஒன்றறியார்
துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழு மாமறுகில் சிரபுரக் கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை ஞான சம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே

திருச்சிற்றம்பலம்

# 4. திருஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகம்

சுந்தரர் ஆலால நஞ்சினை அடக்கி உருண்டை ஆக்கினார்.அதற்குரிய ஆற்றலைத் தந்தது திருநீறு.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம். மதுரையில் அருளியது. இரண்டாந் திருமுறை 66 ஆம் பதிகம். பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்புநோயை (Fever) நீக்கு வதற்காகத் திருநிற்றைப் பூசி, இப்பதிகத்தை ஓதி அவன் நோயைத் தீர்த்தார். திருநீற்றின் பெருமையைச் சிறப்பித்துப் பாடிய பதிகம் இது.

மந்திர மாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே 6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவத நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
**ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே** 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்

தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11

திருச்சிற்றம்பலம்

# மார்கழித் திருவாதிரைத் திருவிழா (ஆருத்ரா விழா)

(சித்தாந்த கலாநிதி, சைவநன்மணி, சித்தாந்த சரபம்
டாக்டர் திருமதி.கோமதி சூரியமூர்த்தி,எம்.ஏ., பி.எச்.டி.,)
மேனாள் பேராசிரியர்,சைவ சித்தாந்தத்துறை,
மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்

மாதங்களில் மார்கழி மாதம் சிறந்தது. கண்ணபிரான் கீதையில், மாதங்களில் நான் மார்கழி மாதமாய் இருக்கிறேன் என்று கூறி அருளினார். இந்த மாதம் தேவர்களுக்கு விடியற்காலை வேளையாகும். இம்மாதத்தின் பெருமையை உணர்ந்த முன்னோர்கள் அதனைப் பீடுடைய மாதம் என்றனர். பீடு என்றால் பெருமை எனப் பொருள். அச்சொல் நாளடைவில் மருவி பீடை மாதம் என வழங்கல் ஆயிற்று. இம்மாதத்தைச் சூன்யமாதம் என்று சிலர் கூறுவர். சூன்யம் என்றல் ஏதுமற்றது என்று பொருள். இம்மாதத்தில் மக்கள் அதிகாலையிலேயே ஏழுந்து நீராடி, பக்தியுடன் பரமனை வழிபடுவதால். ஆணவம் முதலிய மலங்கள் நீக்கப்பட்டு, எக்குற்றமம் இல்லாத மனத்துடன் இருப்பதால் இம்மாதத்தைச் சூன்ய மாதம் என்றனர். இம்மாதம் இறை வழிபாட்டிற்கே ஒதுக்கப் படுவதால் திருமணம் முதலிய சடங்குகள் இம்மாதத்தில் நடத்தப் படுவதில்லை.

இம்மாதத்தில் வரும் முக்கியமான ஒரு திருவிழா திருவாதிரைத் திருவிழா. "திரு" என்னும் அடைமொழி சேர்ந்த நட்சத்திரங்கள் திருவாதிரையும், திருவோணமும் ஆகும்.திருவாதிரை சிவபெருமானுக்கும் திருவோணம்

நாராயணனுக்கும் உகந்த நன்னாளாகும். சிவபெருமானுக்கு ஆதிரையான் என்ற பெயர் உண்டு. மார்கழித் திருவாதிரை விசேட நாள். மா– மாய்தல், கழி – கழிதல். இறைவன் அழித்தல் தொழிலைச் செய்த பிறகு, மீண்டும் தோற்றுவிக்கும் காலத்தை உணர்த்தும். "திரு" என்பது சிறப்பைக் கூறும் அடைமொழி. ஆ– ஆன்மா. திரை– மறைத்தல். ஓர் உயிர் செய்த நல்வினை தீவினைக்களுக்கு ஏற்றவாறு இன்ப, துன்பங்களை இறைவன் ஊட்டும் திரோபவச் செயலை இஃது உணர்த்துகின்றது. இம்மாதம் முழுவதும் இறைவனைத் திருவேம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஓதி வழிபடுவர். **திருவெம்பாவையின் உட்பொருள் பக்குவமுடைய அடியார்கள் பிறரை ஆணவலமாகிய இருளில் பொருந்தியிராமல், சிவபெருமானுடைய திருவருளாகிய நீரில் முழுகுவதற்கு வாருங்கள் என அழைத்தல்.** "மல இருளூற்று உறங்காமல் மன்னு பரிபாகர் அருள், செல முழுக வருக" என அழைத்தல் திருவெம்பாவை என பழைய திருப்பெருந்துறைப்புராணம் கூறுகின்றது. நம் உடலில் படியும் புற அழுக்குகளை நீராடிக் குளித்துப் போக்கிக் கொள்வது போல, நமது உள்ள அக அழுக்கான ஆணவத்தை இறைவனைத் தியானித்து இம்மாதம் போக்கிக் கொள்கின்றோம்.

மார்கழித் திருவாதிரை விழா திருவாதிரை நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கி, அந்நாளில் நிறைவு பெறும் திருவிழா ஆகும். இவ்விழா மிகப் பழங்காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வருவதை,

"கனைக்கும் அதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு வைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா ஒளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க"

என வரும் பரிபாடலால் அறியலாம். இப்பெருவிழா திருவாரூரில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மிகச் சிறப்பாக நிகழ்ந்து வந்ததைத் திருநாவுக்கரசரின் "முத்து விதானம்" என்று தொடங்கும் பதிகத்தால் (4-21) அறியலாம். அப்பதிகப்பாடல் இறுதி தோறும், ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம் என முடிகின்றது. இந்நாளில் தேவர்களும் கூட பூவுலகிற்கு வந்து வைகறையில் சிவபெருமானை வணங்குகின்றார்களாம். (4-21-4) இறைவனைத் தொழாத நாள் துன்பம் என்பர் சிலர். அவனைப் புகழ்ந்து போற்றும் நாள் இன்பம் என்பர் சிலர் (4-21-9) வினைப் பலன்களை உயிர்கள் அனுபவிக்கும் படி செய்யும் இறைவன், அவனை வழிபடும் உயிர்களை வினையிலிருந்தும் விடுவிப்பான் அல்லவா? உடலுக்கு வரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக் கொள்வது போல, உயிரைப்பற்றியுள்ள மலப்பிணிகளை வழிபாடு புரிவதன் மூலம் தீர்த்துக் கொள்கின்றோம். வழிபாட்டின் மூலம் துன்பம் நீங்கப் பெறுவதோடு இன்பமும் ஓங்கப் பெறும். ஆதலால் தான் நாவுக்கரசர் திருஆனைக்காப் பதிகப் பாடலில்

"துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே." (5-31-3)

என்கிறார், வள்ளுவரும்
"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது."
என்கிறார்.

மனக்கவலை தீர்த்தல் என்று கூறாமல், மாற்றல் என்றார். தீர்த்தல் என்றால் துன்ப நீக்கத்தை மட்டுமே உணர்த்தும்.

மாற்றல் என்றதனால் துன்ப நீக்கதோடு இன்ப ஆக்கத்தையும் உணர்த்துகின்றார்.

திருஞானசம்பந்தரும் பூம்பாவையின் எலும்பை உயிர்ப்பிரிக்கப் பாடிய திருமயிலாப்பூர் பதிகத்தில்

"கார்தரு சோலை கபாலீச்சரம் அம்ர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்." (2-47-4)

என்று கூறியருள்வது இவ்விழா மிகப் பழங்காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது என்பதை உணர்த்தும்.

மார்கழி மாதம் பௌர்ணமியை ஒட்டித் திருவாதிரை நட்சத்திரம் வரும். நடராசரை இந்நாளில் வழிபட வேண்டும் என்று காரண ஆகமம் கூறும். திருவண்ணாமலையில் கார்த்திகை விழா சிறப்பாகக் கொண்டாடப்படும். சிதம்பர நடராசருக்கு வருடத்தில் ஆறு நாட்கள் சிறப்பான அபிடேகம் நடைபெறும். அதில் ஒன்று மார்கழித் திருவாதிரைத் திருநாள் ஆகும். (ஏனைய நாட்கள் சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் வளர்பிறை சதுர்த்தி திதி நாட்களாகும். முதல்நாள் கொடியேற்றி மாணிக்கவாசகரை எழுந்தருளப் பண்ணி அபிடேகம், அலங்காரம், நிவேதனம் முதலியன முறைப்படி செய்திட்டு திருவெம்பாவை 20 பாடல்களையும் ஓதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தீபாராதனை எடுப்பர், தேவாரம் முதலிய இதர திருமறைகளுக்குத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவை ஓதுவர், திருவாதிரை பத்தாம் திருநாளன்று நடராஜர் திருவுருவத்தின் முன் ஒரு பசு நிறுத்தப்பபட்டு. அஃது இறைவன் மீளவும் உலகைப் படைத்தல் உயிர்களின் பொருட்டு என்பதை உணர்த்தும். காராம்பசு இருள் போன்ற மலப்பற்றுடைய உயிர்களைக் குறிக்கும். மேலும் அப் பசு கூத்தப் பெருமானின் திருவுருவத்தை நோக்கி நிறுத்தப் படாமல், பின் முதுகைக் காட்டி

நிறுத்தப்படும். அஃது உயிர்கள் திருவடி இன்பத்தை விரும்பாமல் உலக இன்பத்தை விரும்புவதைக் குறிக்கும். அப்பசுவின் முன், தரையில் ஒரு தட்டில் உணவு வைக்கப் பட்டிருக்கும். அஃது உயிர்கள் வினைப் பலன்களை அனுபவிப்பதைக் குறிக்கும் (உணவு – வினை). உணவுப் பாத்திரத்திற்குச் சற்று மேலே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும். அதில் கூத்தப் பெருமான் உருவமும், பசுவின் உருவமும் செம்மையாகமத் தெரியும். உலக வாழ்வில் அழுந்திக் கொண்டிருக்கும் உயிர், அதிலேயே உழலாமல், தன்னைப் பற்றி ஆராயத் தொடங்கினால், தன்னுடைய தன்மையையும், ஐந்தொழில் செய்யும் இறைவனின் தன்மையையும் தெளிவாகக் காணும் என்னும் கருத்து ஆகும். அன்று இறைவனின் அருட் பேறாகக் கருநிறச் சாந்து அளிக்கப்படும். அஃது இறைவன் உயிர்கட்கு மலர்சார்பினால் ஆகிய உலக வாழ்வை அருள்கின்றான் என்னும் கருத்தாகும். நடராசருக்குக் கற்பூர தீபம் காட்டப்படும்போது, காரம்பசு இறைவன் சந்நிதியை நோக்கி நிற்கும். இஃது உயிர்கள் உலக வாழ்வில் உழன்றாலும் இறைவனை மறவாது வழிபடல் வேண்டும் என்பதை உணர்த்தும். மார்கழியில் திருப்பள்ளி எழுச்சி பாடுவதன் உட்கருத்து, நாம் அருள்வழியில் நிற்கும் பொருட்டு, இறைவன் நம் உள்ளத்தில் எழுந்தருளுமாறு அவனை வேண்டும்தலாகும். தில்லையில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றதை,

“ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனோடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.”

என்ற பாடலாலும் அறியப்படும்.

தில்லையில் மட்டுமல்லாமல், பஞ்சசபை என்று போபற்றப்படும் ஏனைய தலங்களாக மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருஆலங்காடு முதலிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக நடைபெறும். மேலும் எல்லாச் சிவன் கோயிலிலும் நடராசர் சந்நிதியில் இவ்விழா சிறப்பாக இன்றும் கொண்டாடப்படுகிறது.

திருப்பெருந்துறையிலும், திருவுத்தரகோச மங்கையிலும், பேரூர்லும் சிறப்பாக நடைபெறும். மார்கழித் திருவாதிரையில் உமையம்மை கண்டு மகிழ இறைவன் திருக்கூத்து ஆடினதால் நாமும் அந்நாளில் கூத்தப்பிரான் தரிசனம் கண்டு குதூகலிக்கின்றோம். நடராசப் பெருமான் பதஞ்சலி, வியாக்கிரபாதர் முனிவர்கள் காணப் பொன்னம்பலத்தில் ஆடினார். மதுரையில் கால்மாறி ஆடினார். திருஉத்தர கோசமங்கையில் பார்வதிக்கு முதல் முதலில் ரகசியத் தாண்டவம் அறையில் ஆடிக் காட்டினார். இங்கு ரகசியமாக அடிக்காட்டியதால் மரகத நடராசர் சந்நிதியில் ரகசியமாக மறைந்துள்ளார்; மார்கழித் திருவாதிரைக்கு முந்தின நாள் பகல் 12 மணிக்குச் சந்தனம் களையப்பட்டுப் பச்சையாய்க் காட்சியளிப்பார். அதன்பின் பல்வேறு அபிடேகங்கள் நடைபெறும். மறுநாள் அருணோதய காலத்தில் ஆருத்ராதரிசனம் நடைபெறும். பின் ஆண்டு முழுவதும் நடராசப் பெருமான் சந்தனக் காப்பிலேயே இருப்பார்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காலை 4 மணிக்கே நடை திறக்கப்படும். திருவாதிரையோடு முடிவடையும் எண்ணெய்க் காப்பு விழாவும், அதே 10 நாட்களில் மாணிக்கவாசகப் பெருமானை எழுந்தருளச் செய்து திருவெம்பாவை இசை முழுங்கச் செய்யும் விழாவும் இனிதே நடைபெறுகின்றன. இந்த விழாவின் தொடக்கம் நாளில்

மீனாட்சியம்மன் காலை 6 மணிக்குப் புது மண்டபத்துக்கு எழுந்தருளித் தைலக்காப்பு, தீபாராதனை முடிந்தபின் சித்திரை வீதிகளில் வலம் வந்து கோயிலுக்குள் வந்து சேரும். ஒன்பதாம் நாளிலும் காலையில் புது மண்டபத்துக்கு எழுந்தருளி. சாயரட்சையில் அபிடேக, தீபாராதனைகள் மடிந்து கனக தண்டியலில் அலங்காரமாகி மாலையில் சித்திரை வீதியில் உலா நிகழும்.

கேரளாவிலும் திருவாதிரை விழா கொண்டாடப் படுகின்றது. திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் நீண்ட ஆயுளுக்காகவும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனைப் பெறவும் விரதம் இருப்பர். உமாதேவி சிவனைக் கணவனாக அடையத் தவம் இருந்ததாகவும், இறைவன் அவருடைய பக்திக்கு மெச்சி, தனுமாசம் திருவாதிரை நாளில் திருமணம் செய்ய இசைந்ததாகவும், அந்நாளே திருவாதிரை நாளாக் கொண்டாடப்படுகிறது என்பர்.

சேந்தனார் என்னும் வறிய பக்தர் திருவாதிரை நாளில் பொருள் வசதியின்றி, தில்லை நடராசப் பெரமானுக்கு எளிய களி சமைத்து உண்பிக்க, அவர் அதனை மகிழ்வுடன் உண்டதால், அந்தநாள் முதல் நடராப் பெருமானுக்கு மார்கழித் திருவாதிரையில் களி நைவேத்தியம் செய்யும் மரபு இருந்து வருகிறது, களி–மகிழச்சி. இன்ப வடிவினனான இறைவன் தன்னை வழிபடும் உயிர்கட்கு நன்மைகள் பல தந்து மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தருவதை உணர்த்தும்.

பழங்காலத்தில் மார்கழித் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெற மன்னர்கள் கோயில்கட்கு மான்யம் வழங்கியுள்ளதைக் கல்வெட்டுச் செய்திகளால் அறியலாம். திருவிடைமருதூர் மகாலிங்கேஸ்வரர் கோயில் கருவறையில் மேற்குச் சுவரில் முதலாம் பராந்தகன் திருவாதிரை விழா

கொண்டாட நிலம் வழங்கிய செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. திருப்பனந்தாளிலுள்ள, அருணகடேஸ்வர கோயில் முதல் பிரகாரத்தின் வடக்குச் சுவரில் விஜயநகர மன்னன் மார்கழித் திருவாதிரை விழா கொண்டாட நிலம் வழங்கிய செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. மாயாவரம் அருகிலுள்ள சிற்றூரின் வீரட்டானேஸ்வர கோயில் மார்கழித் திருவாதிரையில் திருவெம்பாவை ஓதி ராஜாதிராஜதேவன் என்னும் சோழமன்னன் பணம் வழங்கியதான செய்தி காணப்படுகின்றது. நெல்லூர் ஜில்லாவின் சூலூர் பேட்டை யிலுள்ள நாகேஸ்வரரின் கோயிலின் மேற்குச் சுவரில், விஜயகண்ட கோபாலதேவன் என்னும் மன்னன் மார்கழித் திருவாதிரை கொண்டாட நிலம் வழங்கியுள்ள செய்தி காணப்படுகின்றது.

கடலைக் கையினால் நீந்திக் கரைசோந்தாற் போல ஏழுவகைப் பிறவிகளுள் கிடைத்தற்கரிய மானிடப்பிறவி பெற்றுள்ள நாம், மார்கழித் திருவாதிரை நாளில் நடராசப் பெருமானின் திருநடனத்தைக் கண்டு தரிசித்துப் பிறவிக் கடலைக் கடலைக் கடந்திடுவோமாக.

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.**”

**– திருநாவுக்கரசர் தேவாரம் (4-81-4)**

“மோனந்தம் மா முனிவர் மும்மலத்தை மோசித்துத்
தான் அந்தம் ஆன இடத்தே தங்கியிடும் – ஆனந்தம்

மொண்டு அருந்த நின்று ஆடல் காணும் அருள் மூர்த்தியாம்
கொண்ட திரு அம்பலத்தான் கூத்து."

–உண்மை விளக்கம் செ .37

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருவாரூர் பதிகம்

**பதிகக் குறிப்பு:** திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் அருட் பேரொளியாய் மக்களுக்கு அருள் வழங்கிய காலத்தில், திருப்புகலூரை நோக்கி செல்லும் நாவுக்கரசரும், ஆளுடைய பிள்ளையாரும் சந்தித்தனர். அஞ்ஞான்று, திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகேசரின் மார்கழித் திருவாதிரை நன்னாள் திருவிழாவின் சிறப்பினை அருளிச் செய்தது இத்திருப் பதிகம். இது, திருவாதிரைத் திருப்பதிகம் எனப் போற்றப்படுவது.

திருவாதிரைத் திருப்பதிகம்
பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

208. முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தன்ஆருர் ஆதிரைநாளால் அதுவண்ணம்.

**தெளிவுரை:** முத்துக்களைக் கோர்வையாகக் கட்டிய மேல் விதானத்தில், மணிகளும் பொன்னும் இழைக்கப் பெற்ற கவரி விளங்க, முறைப்படி பத்தர்களும் பாவையர்களும் சூழ, ஈசன் பொலிபவர். அவர் பின்னே வித்தகத் திருக்கோலத்தில், எண் கணத்தினருள் ஒருவராகிய விரதிகள் தலைமாலை

ஏந்தியுள்ளனர். அத்தகைய எழில் வண்ணம் உடையது ஆரூரில் மேவும் ஈசனின் திருவாதிரை நாளின் சிறப்பாகும்.

**சிறப்புரை**: ஈசனின் திருவிழாக்களில், மார்கழித் திருவாதிரை நாளின் சிறப்பானது, இவண் ஏத்தப் பெற்றுது. இத்திருவிழாவின் நாயகராகிய ஈசனின் திருநாமமாய்ச் சுத்தரமூர்த்தி சுவாமிகள், "ஆதியன், ஆதிரையன், அயன்மால் அறிதற்கு அரிய சோதியன், சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும் ஓதியன், உம்பர்தம் கோன், உலகத்தினுள் எவ்வுயிர்க்கும் நாதியன், நம் பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளியதே!" என அரளிச் செய்தமை காண்க.

திருவாதிரை நாளின் சிறப்பினைத் திருஞான சம்பந்தர், "கார் திருசோலைக் கபாலீச்சரம் அமர்ந்தர் ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்" (இரண்டம் திருமுறை திருமலைத் திருப்பதிம் பாடல் வ. எண் 505) என அருளிச் செய்தவாறும் நோக்குக.

209\. நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும்என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்கு
அணியான் ஆருள் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: அண்மையிலும் சேய்மையிலும் உள்ள அனைவரும், நாள் தோறும் வந்து ஏத்திப் பிணி தீர்த்து அருள்வீராக, என வேண்டுகின்றனர். மணியே! பொன்னே! மைந்தா! மணாளா! எனப் போற்றித் தொழுகின்றனர். அவ்வாறு ஏத்தும் அடியவர்களுக்கு அண்மையாய் மேவி அருள் நல்குபவர் ஆரூர் ஈசன். அது ஆதிரைத் திருநாளின் வண்ணம் ஆயிற்று.

210. வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மாமணிகள் ஒளிதோன்றச்
சாதிகளாய் பவளமு முத்துத் தாமங்கள்
ஆதியாரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: வீதிகள் தோறும் வெண் கொடிகளும் விதானத்தில் சுடர் விடும் மணிகளும் ஒளி தோன்ற அலங்கரிக்கப்பட்டுப் பவளமும் முத்தும் பொலிய விளங்கும் மாலைகளும் திகழத் திருவாதிரை நாளில் வண்ணம் கொண்டுள்ளது.

211. குணங்கள்பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கிநின்று வானவர்வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: திருத்தொண்டர்கள், ஈசனின் எண்குணச் சிறப்புக்களைப் பேசியும், திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியும் ஏத்துகின்றனர்; பக்தி வயத்தினால் தம் தம் நிலை மறந்து, அர நாமத்தை ஓதுகின்றனர்; வணங்கி நின்று தொழுகின்றனர். தேவர்கள் நாள்தோறும் வந்து துதிக்கின்றனர். இத்தகைய வண்ணம் உடையது ஈசன் விளங்கு ஆரூரில் நிலவும் திருவாதிரை நாள்.

**சிறப்புரை**: ஈசனின் அற்றல் அணங்கன் என ஏத்தப் பெற்றுது. ஈசன் அணங்கு ஆகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்கும் தன்மையில் "அணங்கன் ஆரூர்" என ஏத்துதல் ஆயிற்று எனலும் பொருந்தும். இதனை, மாணிக்கவாசகர், "வணங்கத்தலைவைத்து, வார் கழல் வாய் வாழ்த்த வைத்து, எம்பெருமான் அணங்கொடு அணி தில்லையம் பலத்தே ஆடுகின்ற குணம் கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ" என அருளிச் செய்தமையும் காண்க.

அணாங்கு – தெய்வத் தன்மை.

212. நிலவெண்சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரும்இட்ட கல்லவடங்கள் பரதெங்கும்
கலவ மஞ்ஞை கார்என்று எண்மிக் களித்துவந்து
அலமர்ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: நிலவைப் போன்ற வெண் சங்கும் பறையும் ஆர்த்து எழவும் பலரும் எழுப்பும் நடனத்திற்குரிய வாத்தியங்கள் முழங்கவும், மயில்கள் அவ்வொலிகளைக் கேட்டு இடி முழங்கும் ஒலியெனக் கருதி, மழை வரும் என எண்ணிக் களித்தும் நடனம் புரிகின்றன. அத்தகைய எழுச்சியுடையது ஆதிரை நாளின் எழில் வண்ணம்.

கல்லவடங்கள் – தியாகேசரின் நடனத் திருக் கோலத்தைக் குறிப்பால் உணர்த்திற்று.

213. விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண்பு இலராய்த் தரியார் தலையால் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தைஎன் அப்பன் என்பார்கட்கு
அம்மான் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: பக்தியால் விம்மியும், வெருவியும், விழித்து நோக்கித் தன்னிலை தளர்ந்தும் இருக்கும் அடியவர்களுக்குத் தலைவனாய் விளங்கும் சிவபெருமான், பேரருள் புரிபவர். அத்தகைய அன்பின் வண்ணத்தை உடையது ஆதிரை நாள்.

214. செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர்கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: மகளிர் ஈசனின் திருவடியைச் சிந்தித்து ஏத்துகின்றனர், ஆடவரும் பெண்டிரும் கூடி இருந்து தொழுது பக்தி வயப்படுகின்றனர். இந்திரன் முதலான தேவர்களும் சித்தர்களும் ஏத்தி வணங்குகின்றனர். அத்தகைய நிலைப்பாடு உடையது, திருவாரூரில் விளங்கும் ஈசனின் திருவாதிரைத் திருநாளின் எழில் வண்ணம் ஆகும்.

அந்திரன் – ஈசனின் உறுதியான நிலைப்பாட்டினைக் குறித்தது.

215. முடிகள் வணங்கி மூவாதார்கள் முன்செல்ல
வடிகொள் வேய்தீத்தோள் வானரமங்கையார் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர்புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணமே.

**தெளிவுரை**: தேவர்கள், தலைகளைத் தாழ்த்தி வணங்கி முன் செல்கின்றனார். அழகிய மூங்கில் அன்னதோளுடைய பெருமையுடன் விளங்கும் மங்கையர்கள் பின் செல்கின்றனர். திருவெண்ணீறு முகத்திலும் சரீரத்திலும் பொலியப் பூசிப் பாடுகின்ற திருத் தொண்டர்கள் புடை சூழத் திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானின் ஆதிரைத் திருநாள், வண்ணம் உடையதாய்த் திகழ்வதாகும்.

மூவாதார் – தேவர்கள்; வானர மங்கையர் – வான் அர மங்கையர் – அரனை ஏத்தும் மங்கையர்.

216. துன்பநும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்ப நும்மை ஏத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**தெளிவுரை**: எல்லார்க்கு அன்பனாய் விளங்கும் ஆரூர் நாயகனின் திருவாதிரை நாளில் தரிசிக்கும் அடியவர்கள், ஈசனே! தேவரீரைத் தொழாத நாள்கள் துன்பம் உள்ள நாள்கள்

எனவும், தேவரீரை ஏத்தித தொழும் நாள்கள் இன்பம் பயக்கும் நாள்கள் எனவும் தேவரீர் எம்மைத் திருத்தொண்டராய் ஆட்கொண்டு பணி கொள்வீராக எனவும் ஏத்துகின்றனர்.

**சிறப்புரை:** ஈசனைத் தொழும் நாள் இன்பம் உடையது எனவும், தொழாத நாள் துன்பம் உடையது எனவும் இவண் உணர்த்தப் பெற்றது, இத் தன்மையில், "உம்மை மறந்திட்ட நாள்" கெட்ட நாள் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாயத் திருப் பதிகத்தில் (பாடல் 2) உணர்த்தியருளியவாறும் காண்க.

217. பாரூர் பௌவத் தானைபத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்து
ஓரூர் ஒழியாது உலகம்ளங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன்றன் ஆதிரை நாளால் அது வண்ணம்.

திருச்சிற்றம்பலம்

**தெளிவுரை:** பாரில் விளங்கும் கடல் போன்றவர், சிவபெருமான். அவர், பக்தர்களால் புகழ்ந்து ஏத்தப்படுபவர்; ஓர் ஊர் என்று அமையாது உலகம் எங்கிலும் திகழ்ந்து விளங்குபவர். அப்பெருமான் ஆரூரில் வீற்றிருப்பவர். அவர் காணும் திருவாதிரை நாளின் வண்ணம் மிகப் பொலிவுடையது.

பௌவம் – கடல்.

❊ ❊ ❊ ❊ ❊

**வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெலாம்.**

உ

திருச்செந்திலாண்டவன் துணை

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

அருளிச் செய்த

# திருப்பாட்டு தேவாரப் பதிகம்

கோயில் – தில்லை பண் – குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனே நீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் **தருமனார் தமர் செக்கில்**
**இடும்பொது தடுத்தாட் கொள்வான்**
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரி அகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றாற்போல்
அன்றியே பிரியா துள்கிச்
சரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவி னாரை
ஓராது **தருமனார் தமர் செக்கில்**
**இடும்போது தடுத்தாட் கொள்வான்**
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளும் உள்கிப்
பியாத அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழும் சிந்தை யாரைத்
தரியாது **தருமனார் தமர் செக்கில்**
**இடும்போது தடுத்தாட் கொள்வான்**
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 3

கருமையார் தருமனார் தமர்நம்மைக்
கட்டியகட் டறுப்பிப் பானை
அருமையாம் தன்னுலகம் தருவானை
மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 4

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை உருண்டோட
உதைத்துகந் துலவா இன்பம்
தருவானைத் **தருமனார் தமர் செக்கில்**
**இடும்போது தடுத்தாட் கொள்வான்**
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத் தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே உள்ளமே
ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம்

எத்தாலுங் குறைவில்லை என்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடும் அரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவம் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலைஎடுத்த இராவணனைத்
தலைபத்தும் நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்ற மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே
கருதுமா கருத கிற்றார்க்
கெற்றலுங் குறைவில்லை என்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றட்டித் **தருமனார் தமர் செக்கில்**
**இடும்போது தடுத்தாட் கொள்வான்**
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளும்
தாடுடைய **தருமனார் தமர் செக்கில்**
**இடும்பொது தடுத்தாட் கொள்வான்**

மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரும் அரவல்குல் உமைநங்கை
யவள்பங்கன் பைங்கண் ஏற்றன்
ஊரூரன் **தருமனார் தமர்செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்**
ஆரூரன் தம்பிரான் ஆரூரன்
மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தெம் பெற்றா மன்றே. 10

**திருச்சிற்றம்பலம்**

பொன்னம்பலம் – சுவாமி ; நடராசப்பெருமான் ; தேவி : சிவகாமியம்மை திருமூலட்டானம் சுவாமி : திருமூலநாதர் : தேவி – உமையம்மை. பாடம் : 1. மூழ்கிப்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## வாழ்த்து

விழுமிய பொருளாய் நாளும் மிளிர் குகக் கடவுள் வாழ்க,
குழுமிய தொழும்பர் வாழ்க, குருவுடன் சீடர் வாழ்க,
தொழு குலத்தவர்கள் வாழ்க, துகளறு தவங்கள் வாழ்க,
வழுவறு மறையும், ஆகமமும் சொன முடிவும் வாழ்க.

– பாம்பன் சுவாமிகளின் பரிபூரணானந்த போதம்

❊ ❊ ❊ ❊ ❊
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

உ

## மாணிக்கவாசகப் பெருமான்

அருளிய

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன், இறைவன் அடி வாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீர் ஆர் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி!

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

கண் நுதலான் தன் கருணைக் கண் காட்ட, வந்து எய்தி,
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி;
விண் நிறைந்து, மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் நிறைந்து, எல்லை இலாதானே! நின் பெரும் சீர்,
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்;

புல்லாகிப், பூடாய்ப், புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப், பறவை ஆய்ப் பாம்பு ஆகிக்
கல்லாய் மனிதர் ஆய்ப், பேய் ஆய்க் கணங்கள் ஆய்
வல் அசுரர் ஆகி, முனிவர் ஆய் தேவர் ஆய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்,

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யே! உன் பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்;
உய்ய, என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
"ஐயா" என ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா!
பொய் ஆயின எல்லாம் போய் அகல, வந்து அருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல் விக்கும் நல் அறிவே!

ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்து உலகும்,
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்!
நாற்றத்தின் நேரியாய், சேயாய்! நணியானே!
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!

கறந்த பால் கன்னலொடு, நெய் கலந்தாற் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை,
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி,
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா! உனக்கு
கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம் தன் மேல் வந்து அருளி, நீள் கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு,

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசு அற்ற சோதி! மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம் ஆம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட,

பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆர் உயிர் ஆய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே! துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடு ஆகி அல்லானே!
ஈர்த்து என்னை ஆட் கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்

நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச்சுடர் ஒளியாய், சொல்லாதநுண் உணர்வாய்,

மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன்! ‘எம் ஐயா’, ‘அரனே ஓ’ என்று என்று

போற்றிப்; புகழ்ந்து இருந்து! பொய் கெட்டுமெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து, வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென் பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ! என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித், திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர்! சிவபுரத்தின் உள்ளார்! சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்